# புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம்௵ ஸெப்டம்பர்௴ 6௳ [ந. 60.

# ‘வி’

## விஜயத்துக்காக

## வருஷாந்திரமும் மன்னிக்கமுடியாத மூன்று குற்றங்களும்.

---

இவ்வாரத்தோடு யுத்தத்தின் இரண்டாவது வருஷம் பூர்த்தியாகிறது. தன் கடமையைச் சரிவர நடத்தியவர்களுக்கு தெய்வம் துணை நிற்கும் என்ற பழமொழியை நம்பி இதே மாதிரி அடுத்த வருஷம், இதே மாதம் தேதி திரும்பி வரும்போது மற்றொரு யுத்த வருஷம் மறுபடியும் ஆரம்பிக்காதபடி நாம் பார்த்துக் கொள்ளுவோமாக.

தெய்வாதீனமாக இவ்வருஷம் ஸெப்டம்பர் 3-ம் தேதி இருக்கும் யுத்தநிலை இதற்குமுன் வருஷங்களைவிட அதிக திருப்திகரமாக இருக்கிறது. சென்ற இரண்டு வருஷகாலமாக எங்கு பார்த்தாலும் கொலையும், கொள்ளையும், பஞ்சமும் ஏற்பட்டதுபோல் அல்லாமல் தற்சமயம் கஷ்டங்களின்

வேகம் குறைந்து மனிதவர்க்கத்திற்கே புத்துயிர் உண்டாகியிருப்பதைக் காணலாம். **இதாலி, ஜப்பான்** (நினைத்த விதமாக) **ருஷ்யா**வையும் கைவசப்படுத்திக்கொண்டும், பாக்கியுள்ள **ஐரோப்பிய** சிறு நாடுகளை பங்கப்படுத்தியும், **பிரான்ஸைப்** பொட்டலாகச் செய்தும், **பிரிடனுக்கு** வரும் எல்லா கடல் மார்க்கங்களை நீர்மூழ்கிகளாலும், கண்ணிகளாலும் குண்டுகளாலும் மறித்தும், ஜனநாயகங்களுக்கு அச்சு ஆணியான **பிரிடனை** "லுப்ட்வாபி" படையினால் அழிக்கவும் சித்தமாயிருந்த ஹிட்லர் **பிரிடனை** யும் அது காப்பாற்றிவரும் அம்சங்களையும் அழிக்க நினைத்தது ஜெர்மானி யருக்கும் நடுநிலை நாடுகளுக்கும் தெரியும்.

மேன்மை தங்கிய ராஜப்பிரதிநிதி சொல்வதுபோல—இச்சனியனை பூமியும் எதிரி இவ்வாறெல்லாம் நினைத்தது பிசகு. அதனாலேதான் அபஜயம் அடைந்தான். சென்ற வருஷமும் அவன் எண்ணம் பயன்பட வில்லை. அவனுக்கு அதிக உதவிபுரிந்துவந்த (**இதாலி**) நண்பன் நாடுகளை இழந்தான். மற்றொரு தோழனோடு (**ருஷ்யா**) பயங்கரமான யுத்தம் செய்யவேண்டியிருக்கிறது. மூன்றாவதாக உதவி வந்தவனோடு (**ஜப்பான்**) நம்பிக்கை வைக்க முடியவில்லை.

எல்லாவிதமான எதிர்ப்பிற்குத் தக்கவாறு **பிரிடன்** காபந்து செய்யப் பட்டிருக்கிறது. சாம்ராஜ்ஜியம் சின்னாபின்னமாகப் போகாமல் காப் பாற்றப்படுகிறது. அட்லாண்டிக் யுத்தம் நிச்சயமாக ஜயிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுதுதான் ஸ்வதந்திர நாடுகள், கலங்கும்படியான எதிரியின் அடியினாலுண்டான மயக்கத்திலிருந்து தெளிந்திருக்கிறது. உலகின் தொழிற்சாலைகளில் மூன்றில் இரண்டுபங்கு, விடுமுறை, பிரியமான சல்லாபம், ஒழிவு இல்லாமல் உலக விரோதியை அடக்குவதற்கான யுத்த தளவாடங்களை விருத்திசெய்ய அமானுஷமாயும் மும்முரமாயும் வேலை செய்துவருகின்றன.

இவ்விதமாக விரோதிகள் திடீரென்று கெடுதலடைவதற்கு, சில அதிர்ஷ்டமான காரணங்கள்தான், என்று சொல்வது ஆச்சரியமாகத்தோன்ற லாம். யுத்தத்திற்குமுன் சரியான அபிப்பிராயத்தாலும் ஆழ்ந்த மனோநிலை யினாலும் மனிதனின் நடத்தையினாலும் யுத்தத்தை ஜயித்துவிடலாமென்று ஒருவரும் நம்பவில்லை. ஆனால் முன்சொன்ன காரணங்கள் இருந்தும் யுத்தம் ஜயிக்கப்படவில்லை என்பது உண்மையே. ஆயினும் ஜனநாயகம் எஞ்ஜி அபிவிருத்தியடைந்து, வெற்றிபெற பாடுபடவேண்டும். ஜனநாய கத்தின் புனித சுவபாவத்தாலும், பிரிடிஷாரின் உத்ஸாகத்தாலும் சாம் ராஜ்ஜியத்தின் சிரத்தையினாலும் வின்ஸ்டன் சர்ச்சிலின் செல்வாக்காலும் தான் அடையலாம்.

**ஆனுல் யுத்தம் இன்னும் ஜயிக்கப்படவில்லை யென்பது உண்மைதான்.** வெற்றிக்குத் தடையாக மூன்று காரணங்கள் இருக்கின்றன. அத்தடைகளைப் புறக்கணிப்பதற்கு லாயக்கான மூன்று விஷயங்களை கவனிக்காவிடில் அடுத்த வருஷம் வரையிலும், நெருப்பும், ரத்தமும், சாம்பலும் குவிந்து கொண்டுதானிருக்கும். அவைகள் மன்னிக்க முடியாதவைகள்.

முதலாவது நாஸிக் கொள்கை. இதைப்பற்றி பேசுவதே பாவம் எப்படியாவது இதை உலகிலிருந்து ஒழித்துவிட வேண்டும்.

இரண்டாவது நம் நாட்டிலிருக்கும் ஒத்துழையாமை, பயங்கொள்ளித் தனம், விரோதம்தான். இவைகளில் எந்தப் பெயரை வைத்துச் சொன்னுலும் இவையாவும் கெடுதலானவை. இச் சமயத்தில் இதைச் செய்கிறவர்கள் வெரும் துரோகிகள். தேசத்தையும், கொள்கைகளையும் குடும்பங்களையும் கெடுத்து தங்கள் மனதிற்குத் தோன்றுவதுதான் **சரியானதென்று** வைத்துக்கொண்டு அடையமுடியாத பொருளாதார, அரசாங்க லக்ஷியங்களுக்கு சிரமப்படுகிருர்கள்.

மூன்ருவது நம் நாட்டிலிருக்கும் அச்சிரத்தையான ஆத்மதிருப்தி. பொதுமக்கள் தற்போதிருக்கும் சுகத்திஞல் திருப்தியடைந்து வருங் காலத்திலும் யாவும் நன்மையாகவே முடியுமென்று நினைத்திருக்கிருர்கள். நம்முடைய போர்வீரர்களும், மாலுமிகளும், விமானிகளும் தொழிலாளிகளும் பாடுபட்டு பிராணத்தியாகம் செய்து அடையும் வெற்றியில் ஒரு பாகத்தை மாத்திரம் விரும்பி, கொஞ்சமும் பிரார்த்தனை, சிரத்தை, உத்ஸாகம், தங்களால் இயன்றது இவைகளைக் கொடுக்காமல் இருப்பது தான் பெரும் குறை. அவ்விதமில்லாமல் அவர்கள் உதவி செய்தால் உலகத்திற்கேற்பட்ட ஆபத்து ஒரு க்ஷணமாவது குறைந்து நன்மையை அளிக்கும்.

“நீங்கள் யாவற்றையும் கொடுத்து உதவிக்கொண்டிருந்தால் அதை இரட்டிப்பு மடங்காக கொடுத்து உதவுங்கள். முடிந்தவரை பாடுபடுவதாக இருந்தால் இன்னும் அதிகமாக பரிசிரமப்படுங்கள்......இம் மாபெரும் காரியத்தில் உங்களைத் தோழர்களாகவும், தர்மம், கௌரவம் என்ற கஷ்ட மார்க்கங்களில் துணைப் பிரயாணம் செய்பவர்களாகவும் நினைத்து நான் உங்களுக்குச் சொல்கிறேன்......முடிவுவரை வெற்றியடைய நமக்கு **பூர்ண** தைரியம், உறுதி, விடாமுயற்சி, பொறுமை தேவை.” ஸெப்டம்பர் **3-ம்** தேதி மேன்மை தங்கிய ராஜப்பிரதிநிதி **இந்தியா**வுக்கு இது போன்ற மொழிகளைச் சொன்னுர். நிச்சயமாக **புதுக்கோட்டை**யில் அவரது மொழிகள் மதிப்புக் கொடுக்கப்பட**வேண்டும்.**

பிரஸங்கம் 60.

# உலகிலேயே பெரிய யுத்தம்.

(பி. பி. ஸி-யில், லண்டன் ஈவினிங் ஸ்டாண்டர்டு என்ற பத்திரிகாசிரியர் செய்த ஒலிபரப்பிலிருந்து எடுக்கப்பட்டது.)

ஸர் எட்வின் கிரீஸி என்பவர் உலகின் முடிவான யுத்தங்களைப்பற்றி பிரசித்தமான புஸ்தகத்தை எழுதும்போது, அதற்குப் பிறகு இரண்டு சந்ததி கிரமித்து நேரக்கூடிய யுத்தத்தின் அனுபவங்களை அவர் எதிர்பார்த்திருக்கமுடியாது. முன் காலத்தில் நடந்த கன்னீ, அஜின்கூர், வாடர்லூ என்ற சண்டைகளெல்லாம் தற்போதைய டான்னன்பர்க், ஸோம் என்ற சண்டைகளுடன் ஒப்பிடவே முடியாது. பின் சொல்லப்பட்ட சண்டைகளும் ருஷ்யாவில் நிகழும் பெரிய யுத்தத்தைப் பார்க்கும்போது ஒன்றுமில்லாததுபோல் தோன்றும்.

இவ்வறிக்கையைப் படிப்பவர்களுக்கு, முக்கியமாக கவனிக்கவேண்டிய பிரச்னைகளைப்பற்றி வற்புறுத்தியது ஞாபகம் இருக்கும். அவைகள் பால்டிக், கருங்கடல் பிரதேசத்தில் நடப்பவைகள்தான். இந்த யுத்தத்தின் முடிவைப் பற்றியாவது, கபடமான நாஸிகளின் முறை, மனிதவர்க்கத்தையே நிலை நிறுத்தவிருக்கும் பிரிடிஷ்காரர்கள் கையில் கடைசியாக அகப்பட்டுக்கொண்டு அழிவதைப் பற்றியாவது ஒருவித சந்தேகமும் வேண்டியதில்லை. நிச்சயமாக அழிந்துவிடும். அதேமாதிரி, இந்தியாவில் இருக்கும் நாம் சுகமாகவும், பத்திரமாகவும் இருந்து கொண்டும், சைனியம் முன்னேறுவதும் பின் போவதுமாக நடக்கும் யுத்தத்தைப் பற்றி தெரிந்துகொண்டு, 1,000 மைல் நீளம் வரையிலுள்ள போர்முனையில் நமக்காக சண்டைபோடுகிறவர்களுக்கு, மனப்பூர்வமாகவும் மும்மரமாயும் உத்ஸாகம் அளிக்க முயற்சி எடுத்துக்கொள்ளாமலும் உதவாமலும் இருப்பது தவறு.

ஆகையால் இந்த யுத்தமானது உலகயுத்தம் என்றுவது, தனது க்ஷேமத்துக்காகவே புரியப்படுகிறதென்றுவது ஒருவரும் விசேஷமாக புதுக்கோட்டையில் நினைக்கக்கூடாது. ஆகவே ஈவினிங் ஸ்டாண்டர்டு என்ற பத்திரிகையின் ஆசிரியர் ஆன மிஸ்ட்டர் பிராங்க் ஓவன் என்பவர் அமெரிக்காவிற்குச் செய்த இரண்டு ஒலிபரப்புச் சுருக்கத்தை இங்கே பிரசுரிக்க முன்வருகிறோம்.

முன் சொன்ன ஈவினிங் ஸ்டாண்டர்டு பத்திரிகை லண்டன் பத்திரிகைகளில் முக்கியமானது. அதற்கு பத்திராதிபராக இருப்பதென்றால் அதிக அனுபவம், பல தேசங்களுக்குச் சென்று உலகானுபாவங்களைத் தெரிந்துகொள்வது, படிப்பு, சொல்வன்மை பொருந்தியிருக்கவேண்டும். ஆகையால் அப்பேற்பட்டவர் நவீன யுத்தத்தின் வர்ணனையும், விசேஷமாக ருஷ்யா யுத்தத்தின் போக்கையும் பற்றி அவர் சொல்லியிருப்பது எனக்கு திருப்தியளித்ததுபோல யாவருக்கும் திருப்தியளிக்கும் என்பது உண்மை. ஆனால் அவர் பேசியது முக்கியமாக அமெரிக்க வாஸிகளுக்குத்தானே, இந்தியர்களுக்கு இல்லை என்று நினைத்துவிட வேண்டாம். இந்தியருக்கும் பொருந்தும்.

"நான் பேசப்போகும் விஷயம் ஜுலை மாதம் கடைசி வாரத்தில் பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு சொன்னதிலிருந்து எடுக்கப்பட்டது" என்று பிராங் ஓவன் சொன்னார். ரூஸ்வெல்டு ஜுலை கடைசி வாரத்தில் பின்வருமாறு சொன்னார். "இன்று நான் அமெரிக்கச் சபைக்கு உத்தியோக முறையில் அவசியம் சொல்ல வேண்டியது என்னவென்றால், சபையோருக்கும் தெரிந்தமாதிரி, ஐரோப்பிய நிலை, ஒரு வருஷத்திற்குமுன் இருந்ததைவிட அதிகக் கவலைக்கு இடமாக இருக்கிறது." "இம்மொழிகளே யுத்தத்தின் சரியான நிலையை உண்மையில் வெளிப்படுத்துகின்றன. இது, 1940-ம் வருஷம் ஜுன் மாதத்தில் பிரான்ஸை ஜெர்மனி தோற்கடித்ததிலிருந்து பிரிடன்மேல் படையெடுக்க ஆரம்பித்தவரையிலும் இறுதியிலுள்ள காலத்தின் நிலையைப்பற்றி சொன்னதாகும். அந்த சமயத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்டின் செய்தியைக் கேட்டு நம்மில் சிலர் சந்தோஷப்பட்டார்கள். அவர் அத்தருணம் வற்புறுத்தி, சில ஆபத்துகள் நேரிடலா" மென்று நமக்கு எச்சரிக்கை செய்தார். ஏனென்றால் நாம் கவனிக்காமல் இருக்கக்கூடும். "ஹிட்லர் இவ்வருஷம் மாஸ்கோவை நோக்கிச் செல்லுகிறான், அவ்விதம் அவன் செய்வது, பிரெஞ்சுக் கடற்கரையில் சென்ற வருஷம் பொலாயினிலிருந்ததைவிட அதிக ஆபத்தை நமக்கு விளைவிக்கும்" என்று நமது பத்திரிகையில் நாம் எழுதும்பொழுது நம்மை பயங்குள்ளிகள் என்றும் பயமுறுத்துகிறவர்களென்றும் சிலர் பரிஹாஸம் செய்தார்கள். நம் பத்திரிகை படித்த சில நேயர்கள் "ருஷ்யர்கள் பலமாய் எதிர்ப்பார்களா" என்று கேட்டார்கள். ருஷ்யர்கள் சாதாரணமானவர்களல்ல என்பதினால்தான் யுத்தப் பிரச்னைகள் பெரிதாயும், முக்கியமாயும் ஆகிவருகின்றன என்று நாம் சொன்னோம். "ருஷ்யாவை ஹிட்லர் எதிர்த்தது ஒரு தவறல்லவா" என்று மற்றும் சிலர் கேட்டார்கள். முடிவில் பிசகாகப்போகலாம். ஆனாலும் ருஷ்ய யுத்தத்தை ஹிட்லருக்கு தொடங்க அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால் 1940-ம் வருஷத்தில் பிரிடன்மேல் எதிர்ப்பு பலிக்காமல் போனதால் 1941-ம் வருஷம் ருஷ்யாமேல் படையெடுக்கவேண்டிவந்தது. இதிலிருந்து, பிரிடனை முற்றுகையிட வேண்டுமானால் ஹிட்லர் ருஷ்யாவை ஜயித்தாகவேண்டும். மேலும் பெரிய அயலானான ருஷ்யாவை பின்புறத்தில் வைத்துக்கொண்டு தைரியமாக எந்த முட்டாளும் இங்கிலாந்தை முற்றுகையிடமாட்டான். ருஷ்யாவோ பிரதிதினமும் பலமடைந்து வந்தது. மேற்குப் போர்முனையில் பிரான்ஸில் நாஸிகள் வெற்றியடைவதைப் பார்த்து சந்தோஷ மடைந்தாலும் நாஸிகளின் வெற்றிகரமான யுத்த யந்திரங்கள் கிழக்கே ருஷ்யா பேரில் படையெடுக்க உபயோகப்படுத்தப்படும் என்று ருஷ்யா எதிர் பார்த்திருக்கும்.

இப்பொழுது ருஷ்யாவும், ஹிட்லரும் ஒருவரையொருவர் நன்றாகக் கண்டு கொண்டார்கள். ஹிட்லரின் முறைகளும் அவன் விருப்பத்திற்கு அனுகுணமாக, உலகாக்கிரமணத்திற்கு இடைஞ்சலாக இருக்கும். எந்த நாடுகளையும் சுக்குத் தூளாகத் தொலைக்கப் பார்க்கின்றன. அதற்காக, பிரான்ஸ், பிரிடன், ருஷ்யா, அமெரிக்கா நாடுகள் மின்னல்போல் தாக்கப்பட்டு, அடிக்கப்பட்டு ஒழிக்கப்படும். சமயம் வந்தபொழுது ஒரு காரணத்தை வைத்து ஜப்பானும் முடிவில் ஒழிக்கப்

படும். இந்த லக்ஷியத்திற்காக ஒரு குறிப்பிட்ட தேசம் ஜயிக்கப்படும்வரை மற்ற தேசங்கள் ஒன்று சேராமல் பிரிக்கப்பட்டால் ஜெர்மனிக்கு சாதகம்தான். இவ்விதம் ஒவ்வொருவராக நாசம் செய்வதென்பதுதான் ஹிட்லர்கொண்ட யுத்த அபிப்பிராயம். தனக்கு சிநேகமானவனைப் பிரித்தோ, இரு சிநேகிதர்களை கலைத்தோ, விடுவது ஜெர்மனிக்கு அதிக சாதகம். இதெல்லாம்தான் ஹிட்லரின் பெரிய திட்டங்கள். இதுவரை நாம், பிசாசுபோல் பயமுறுத்துகிறவனும் பேய்பிடித்தாடுகிறவனுமான ஹிட்லருடைய அவன் பயமுறுத்தல்களையும், ஆட்ட வாட்டங்களையும் வஞ்சக வார்த்தைகளையும் கேவலமென்று தள்ளிவிட்டு அவனுடைய திட்டங்களை நன்கறிந்தோம். ஆகையால் நீங்களும் அவன் ஜாபிதாவில் அடங்கி யிருக்கிறதால் அவைகளைப் பற்றி நாங்கள் ஞாபகப்படுத்துகிறோம். (இப்பிரசங்கம் அமெரிக்க மக்களுக்குச் செய்யப்பட்டது).

தூரக்கிழக்கில் ஜப்பானுடைய நடவடிக்கைகளும் ஹிட்லருடைய திட்டத்தை பூராவாக அனுசரித்துத்தான் இருக்கின்றன. ஒருக்கால் இவை, யுத்தத்தின் கடைசி பாகத்திற்கு முந்தினதாக இருக்கலாம். தற்காலம் ஜப்பான் செய்ய வேண்டியதெல்லாம் ருஷ்யச் சைனியத்தையும், ஆஸ்திரேலியப் படையையும், பிரிடிஷ் கப்பற்படையையும் ஜெர்மனியை எதிர்ப்பதிலிருந்து பிரித்து பலஹீனப் படுத்தவேண்டுமாம். அதோடு அமெரிக்காவை ஐரோப்பிய நாடுகளுக்கு உதவாமலும், ஐரோப்பிய சண்டையில் ஈடுபடாமல் செய்வதும் ஜப்பானின் மற்ெறாரு நோக்கம். ஆனல் ஜப்பான் இப்பொழுது மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுகிறது. குள்ளநரி போன்ற முஸோலினி, ஹிட்லரின் விருப்பங்களுக்கு இவ்விதம் வசப்பட்டதால் இதாலி ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் ஒன்ருக இருக்கிறதை ஜப்பானியர் நன்ருக அறிந்துகொண்டுவிட்டார்கள். ஜெர்மனி இதாலியை வியாபித்ததுமில்லாமல் அபிஸீனியா, ஸோமாலிலாந்து, எரிட்ரியா நாடுகளை அரசு புரியவேண்டிய சிரமத்தையும் நேசதேசங்கள் வாங்கிக்கொண்டார்கள். முன் சொன்ன பயத்தால்தான், செய்யவேண்டிய அதிக்கிரமச் செய்கைகளில் மெதுவாயும் ஜாக்கிரதையாயும் ஜப்பான் நடந்துகொள்ளுகிறது. ஆனல் ஜப்பான் கொலைகாரத் தொழிலில் பூர்ணமான தேர்ச்சிபெருவிடிலும் மஞ்சூரியாவையும், சைனவையும் கொலை செய்ததினல் அவைகள் ஜப்பானின் கொடுங்கோலுக்கு அத்தாக்ஷியாக இருக்கின்றன. அத்துடன் இல்லாமல் எவ்வளவு தற்புகழ்ச்சி கொண்டாலும், ஐரோப்பிய நாடுகளுடைய பூராச் சேனைகளுடன், யுத்தம் புரிய சைனிய பலம் இல்லை. அவைகளுக்கு ஒரு மரியாதை காட்டிவருகிறதால் மற்ற நாடுகளைவிட தான் மட்டம் என்ற எண்ணமும் உண்டு.

ஐரோப்பிய நாடுகள் என்ருல் பரிதாபநிலையிலிருக்கும் விஷி அரசாங்கத்தாரை அந்த ஜபிதாவில் சேர்க்கவில்லை. ஜப்பானும் அதை ஒரு பெரிய நாடாகக் கருதவில்லை. அதனல் தான் விஷிக்குச் சொந்தமாக இந்தோ-சைனவிலுள்ள இடங்களை முதலில் ஆக்கிரமித்துக்கொண்டது. இந்த விதமாக விஷியின் கேவல நிலையை ஜப்பான் சரியாக ஆழம் பார்த்துவிட்டது. ஆகையால் விஷி, தன்

சொத்துக்களை பத்திரப்படுத்த திருடனிடம் ஒப்புவித்த மாதிரி, ஜப்பானிடம் தன் நாடுகளை ஒப்படைத்துவிட்டது! இது தான் கொள்ளைகாரர்களுக்கு கொடுக்கும் லஞ்சம். அதனால் விஷி தான் அவஸ்தைப்படுகிறது. வேறே ஒருவருக்கும் தொந்தரவு இல்லை. ஆக்கிரமணம் மற்ற இடங்களுக்குப்பரவாமல் இருந்தால் நாம் இதைப் பொருட்படுத்த வேண்டாம். ஆனால் பிரிடன், ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து, இந்திய அரசாங்கத்தாருக்கும் இந்தோ-சைனாவோடு ஜப்பான் நின்று விடாதேன்பது தெரியும். "ஆசியாவில் இதுதான் கடைசியான தேசாக்கிரமணம்" என்று சொல்லும் வார்த்தைகளை நாமும் ருஷ்யாவும் கேட்கத் தயார் தான் ஆனால் தெற்கு நோக்கி மேலும் பிரயத்தனம் செய்தால் ஜப்பானுக்குத் தான் முக்கியமாக ஆபத்து என்று எங்களுக்குத் தெரியும். இந்தோ-சைனாவிலும், தாய்லாந்திலும் தன் ஆக்ஷியை ஸ்தாபித்தால், பர்மா ரஸ்தாவையும், புதிதாக தைரியமாக, சங்கிங்கிக்கும் கல்கத்தாவுக்கும் போடப்பட்ட பாதையையும் கைப்பற்றிஅடைத்துவிடலாம். இவ்விதம் செய்ய முடிந்தால் சைனாவின் சேனையை பலஹீனப்படுத்தி சைனா பூரா வசப்படுத்திக் கொள்ளவேண்டும். அதன் பிறகு தன்னை 10 வருஷங்களாக அடக்கி வந்த ருஷ்யாவின் மேல் பாய்ந்து பஸிபிக் சமுத்திரத்தில் ருஷ்யாவுக்குச் சொந்தமான கடற்கரைப் பிரதேசங்களைப் பிடிக்கப் பார்க்கும்.

இப்படியெல்லாம் ஹிட்லரின் வருங்கால திட்டம் கிழக்கு பாகத்தில் போடப்பட்டிருக்கிறது. மேற்கு பாகத்தில் இதே மாதிரியான எண்ணங்களுடன் இருந்துவருகிறார். ருஷ்யா தோற்கடிக்கப்பட்டோ, ருஷ்யச் சைனியம் கலைக்கப்பட்டோ விட்டால் ஜெர்மனியின் பூரா முஸ்தீப்பையும் முக்கிய லக்ஷியத்தின் (நம்மள்) பேரில் அனுப்புவான். இதற்கு உதவியாக விழித்துக்கொண்டிருந்து ஸ்பெயினை ஜெர்மனியுடன் சேர்த்து ஜெனரல் பிராங்கோ, இரண்டாவது பிலிப்பும், ஸ்பானிய ஆர்மெடாவும் பிரிடனை எதிர்த்து முடியாதென்றுவிட்டுப் போனதை மறுபடி துவக்கலாம். அப்பொழுது ஜிப்ரால்டரை கைவசப்படுத்தி, பிரிடிஷ் கப்பல்களை வம்புக்கிழுத்து, மாலுமிகளை, நம்முடைய முன்னோர்களை, நாம் வெற்றியடைவதற்கு முன் ஹிம்ஸித்த மாதிரி ஹிம்ஸிக்கலாம். ஒருக்கால் விஷி பிரான்ஸும் மற்றும் ஒரு முறை யுத்தத்தில் ஈடுபடலாம். இந்தத் தடவை பிரிடனுக்கு எதிரில் போர்புரிய வேண்டியிருக்கும். இவ்வாறு எல்லாம் ஏற்படுவதற்கு முன் நம்முடைய நிலை வேறுவிதமாக இருந்தால்தான் முடியுமென்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இவையாவும் ருஷ்ய யுத்த முனையின் முடிவைப் பொருத்திருக்கிறது.

இதை அனுசரித்து உலகத்தின் க்ஷேமமே நிற்கிறது. யுத்தம் ஆரம்பித்து 10 வாரங்களாக, ஓய்வு ஒழிவு இல்லாமல் மேல் மேல் வளர்ந்துகொண்டு இரவும் பகலும் ஒருவிதமான முடிவும் கண்டுபிடிக்க முடியாமல் நடந்து வருகிறது. யுத்தச் செய்திகள் சரியாகக் கிடைக்கவில்லை. இருந்தாலும் ருஷ்யர்கள் பிடிவாதமாக இருக்கிறதும், சைனியம் முறிபடவில்லை யென்பதும், எதிரி மேல் பலமான எதிர் சண்டை செய்யக்கூடிய நிலையிலிருப்பதும் தெரிகிறது. இதற்கிடையில் ஜெர்மானியர் முன்னேறி வருகிறார்கள். தினம் 12 மைல் வீதம் தான் போகமுடிகிறது.

அவர்கள் போகும் மார்க்கமெல்லாம் ரத்த வெள்ளம்தான். நெபோலியன் தோற்றுத் திரும்பிவரும் பொழுது அப்படி வர நேரிட்டது. ஜெர்மன் அணியிலும் சிலர் "எவ்வாறு நாம் திரும்பிப் போகப் போகிறோம்" என்றும் ஆச்சரியப்படுகின்றனர். ஜெர்மனியின் தொழிற்சாலைகளில் மாத்தல் வேலைக் காகச் சென்ற ஸ்திரீகளும் "இவர்கள் திரும்புவார்களா"? என்றும் கேட்கிறார்கள். இக்கவலை ஜெர்மன் மக்களை அதிகம் வாட்டி வருகிறது. 1918-ம் வருஷம் முதல் பழைய யுத்தத்தினால் ஜெர்மனி பூராவும் எரிந்து சாம்பலாகக் கிடக்கிறது. அந்த யுத்தத்தில் ஆரம்பத்தில் நான்கு வருஷங்கள் வரை ஜெர்மனிக்கு ஒரே வெற்றியாகத்தான் இருந்தது. ஆனால் முடிவில் மீள முடியாதபடி தோல்வி வந்தது. 1918-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் ஜெர்மானியர் எதிர்த்த சமயத்தில் இருந்தது போலவேதான் இப்பொழுதும் இருக்கிறார்கள். அந்த சமயத்தில் ஜெர்மனியை தோற்கடிக்கும் பொழுதுதான் முதல் முதலாக சைனியமும் பீரங்கிகளும் ஜெர்மனியைவிட மேற்குப் போர்முனையில் நமக்கு அதிகமாக இருந்தது. அதை எதிர்க்க லுயூடன்டார்ப் இன்னும் அதிகமாக 10 லக்ஷம் சைனியத்தையும் பல பீரங்கிகளையும் திரட்டிக் கொண்டுவந்தான். ஆனால் அமெரிக்காவின் உதவியிருந்ததால் ஜெர்மனியால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்த யுத்தத்தின் ஆரம்ப காலங்களில் அமெரிக்கச் சைனியம் பிரான்ஸு வரையில் வராததால் லுயூடன்டார்ப்பு பெரிய சைனியத்தைத் தயார் செய்து நம்மை எதிர்க்க 6 மாத காலம் எடுத்துக் கொண்டு அதிக சிரமப்பட்டு ஜயத்தையும் அடையப் பார்த்தான். ஆனால் நேசதேச சைனியங்கள் அந்த கோடை காலம் பூரா தைரியமாக நின்றன, அமெரிக்காவிலிருந்து புதிய சைனிய வியூகங்கள் நமது உதவிக்கு வந்து கொண்டிருந்தன.

ஜெர்மன் சைனியம் அப்பொழுது எவ்விதம் முறிந்து கலைந்தது என்பதை அவர்கள் மறக்கவில்லை. "ஆனால் அதைப்பற்றி ஜெர்மானியர் பிரஸ்தாபிக்கிறதில்லை. அச்சமயம் அவர்கள் கப்பற்படை கலகம் செய்ததும், மேற்குப் போர்முனையில் ஜெர்மன் கப்பல்கள் யுத்த சின்னத்தை காண்பிக்காமல், புரட்சிக்கு அடையாளமாக புதுவிதமாக கொடிகளை வீசியதெல்லாம் மறக்கவில்லை. அவ்விதம் இப்பொழுதும் நேருமோ என்ற சந்தேகம் அவர்களுக்கு உண்டு. அதற்குத் தகுந்தாற்போல் அமைதிக் குறைவைக் காண்பிக்கவே இரவும் பகலும் பிரிடிஷ் விமானப் படை இடைவிடாது தாக்கி வருகிறது. ருஷ்ய நதிதீரங்களில் எண்ணிராத ஜெர்மானியர் நாசமடைந்து வெற்றிபெருவதாகச் சொல்லுவதும் ஜெர்மானியர் மனக்கலக்கத்தை விருத்தி செய்கிறது. இவ்விதமாக யோசித்துக்கொண்டு காராகிருஹ வாசம் செய்வதுபோல ஜெர்மானியர் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் வெளிநாடுகளில் உள்ள நேசதேசத்து ஸ்வதந்திர ஜனங்கள், தொழிற்சாலைகளில் சரியான திட்டப்படி விருத்தி செய்யும் டாங்கிகளும், விமானங்களும் பீரங்கிகளும் செய்யப்படும் ஓசைகேட்டும் ஹிட்லர் கொடுங்கோல் அழிந்து உலகத்திற்கே கௌரவம் வந்துவிடுமென்ற நினைப்பு உண்டாகியிருக்கிறது."

பத்திரிகாசிரியர்கள் யாவரும் முடிவைப்பற்றி தைரியமாகத்தானிருப்பார்கள். ஆனால், நமக்கு தைரியமும், நம்பிக்கையும் உண்டானாலும் இவ்விதமாக

வெல்லாம் நடத்த எவ்வளவு சிரமம் பிடிக்குமென்பதை கவனிப்பது நலம். அதில் மிஸ்ட்டர் பிராங்க் ஓவனின் உத்தேசம் சரியானதுதான். அது எப்படி ஆனாலும், ருஷ்யர் மேல் பிரிடிஷ் மக்களுக்குள்ள சகிருத் வாஞ்சையைப்பற்றித்தான் அவர் அதிகம் சொல்லுவது. தாங்கள் தேவைகளால் சிரமமடைந்தாலும் ருஷ்யர்களுக்காக உதவத் தயாராக இருக்கவேண்டுமென்பதைப் பற்றிச் சொன்னார். நடு அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஸ்வதந்திரம் விரும்பும் நாடுகளுக்கு உதவுவதற்கு மிஸ்ட்டர் ரூஸ்வெல்டும் மிஸ்ட்டர் சர்ச்சிலும் பேசியதும் அதற்குத்தான். இதுதான் அவர் சொல்லுவது :—

"இச்சமயம் மறுமுறையாக கிழக்குப் போர்முனையில் நடந்தேறிவரும் பெரும் யுத்தத்தைப்பற்றி பிரஸ்தாபிக்கிறேன். ஏனென்றால் பிரிடனிலுள்ளோர் யாவரும் இந் நாட்களில் அதைப்பற்றி பேசிக்கொண்டோ நினைத்துக்கொண்டோ இருக்கிறார்கள். ஒரு சிநேகிதனைத் தெருவில் கண்டு 'எப்படி சண்டை இருக்கிறது' என்று கேட்டால் ஒடெஸ்ஸாவையும், நீபர் நதியையும் ருஷ்யர்கள் தற்காப்பு செய்வது ருஷ்யச் செஞ்சேனையின் தந்திரங்கள், தளவாட ஸப்ளை, அடுத்தபடியாக மாஸ்கோவில் ஜெர்மானியரின் எதிர்ப்பு, காகேஸஸ் பிரதேசங்கள், எண்ணெய்ப் பிரதேசங்கள், லெனின்கிராட் என்பவைகளைப்பற்றி பெரிய உபன்யாசம் செய்யப்படுமென்பதில் சந்தேகமில்லை. இவ்வுபன்யாசத்தில் நிச்சயமாக இவைகள் சம்பந்தப்படும். ஸ்வான்ஸியில், வியாழக்கிழமை, கப்பல் தொழிலாளனைக் கண்டு பேசினேன் :—'இங்கே ஜெர்மானியர் விமானப்போர் நடத்தினார்களா?' என்று அனுதாபத்துடன் கேட்டேன். 'ஆமாம்' என்று எங்கள் தேசத்திற்கு ஏற்பட்ட உத்ஸாக ஸ்வரத்துடன் பதிலளித்தான். 'வாஸ்தவம் எங்களை இங்கு அடித்ததற்குப் பதிலாக ருஷ்யாவில் ஹிட்லர் வாங்குப்படுகிறார்' என்று பதிலுரைத்தான். வெல்ஷ் மனிதன் சொன்னது உண்மைதான். ருஷ்யாவில் ஹிட்லர் படும்பாட்டிற்குக் கணக்கில்லை."

* மிஸ்ட்டர் ஓவனும், ஸ்வான்ஸி கப்பல் வேலையாளும் சொன்னதின் விவரங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். இங்கிருக்கும் பிரிடிஷ் ஜனங்களுக்கு எவ்விதமான சண்டை அவசியமென்றும், ருஷ்யர்களுக்கும் இந்தியர்களுக்கும் ஏற்படும் உதவியைப்பற்றியும் தெரியவேண்டும். பிரிடனைப் போல ஒரு நேசதேசம் இல்லாவிடில், எகிப்தைத் தற்காப்பு செய்யவும், இராக், பாலஸ்டைன், ஸிரியா, இரான் தேசங்களில் யுத்தத்தை விரும்பாத மக்களுக்கு கொடுமையான முறையில் ஏற்பட்டிருக்கும் ஜெர்மன் சூழ்ச்சிகளை அகற்றுவது முடியாமல் போயிருக்கும். இந்தியர்வரையிலும் கஷ்டம் வந்திருக்கும்.

"அந்த வேல்ஸ் தேசத்தவன் சொன்னது உண்மைதான். ருஷ்யாவில் அபாரமான கணக்கிலும், முறையிலும் ஹிட்லர் அடிக்கப்படுகிறான். லண்டனிலிருக்கும் நாங்கள் உலகிலேயே பெரிய யுத்தமான ருஷ்யச் சண்டையிலிருந்து வெளிவரும் அறிக்கைகளின் உண்மையை சரியாக பரிசீலனை செய்கிறோம். நெபோலியன் செய்த சண்டைகளில்தான் 'அறிக்கைபோன்ற பொய்கள்' என்ற வசனம் ஏற்பட்டது, தன் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு

10 லக்ஷம் பிரெஞ்சுக்காரர்களைப் பலிகொடுத்த நெபோலியன் மஹாப் புளுகன். ஹிட்லரைவிட நேர்த்தியாகப் புளுகக்கூடியவன். அதைப்படியானாலும் தற்போது ஜெர்மன் முகாமிலிருந்து ருஷ்ய யுத்தத்தைப்பற்றி வரும் அறிக்கைகள் நெபோலியன் சொன்னதைக்காட்டிலும் அபாண்டமான பொய்க் கணக்குகளைத் தெரிவிக்கின்றன. உதாரணமாக 8,00,000 ருஷ்யர்கள் கைதி செய்யப்பட்டதாயும், 20,00,000 இறந்ததாகவும், 10,000 ருஷ்ய டாங்கிகளும், 7,000 விமானங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் சொல்லுகின்றனர். இவை நம்பமுடியாதவை, இருந்தாலும் 6,00,000 ருஷ்யர்கள் இறந்ததாகவும் 5,000, டாங்கிகளும் 4,000 விமானங்களும், 7,000 பீரங்கிகளும்தான் நஷ்டமென்று ருஷ்யர்களே ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆனால் இதைவிட ஜெர்மன் நஷ்டங்கள் இன்னும் அதிகம் என்று சொல்லுகிறார்கள். இவ்விதமாக ருஷ்யர்கள் கொடுக்கும் கணக்குகளிலிருந்து மற்றும் சில விஷயங்கள் தெரிகின்றன. அதோடு ஏழு வாரமாகக் கிழக்குப் போர்முனையில் இரு சைன்யங்களும் மோதிக்கொள்வதால் ஏற்படும் நஷ்டங்கள் எவ்வளவு என்றும் தெரியப்படுத்துகின்றன." மிஸ்ட்டர் ஓவன் கொடுத்த கணக்கிற்குப் பிறகு மூன்று வாரங்கள் கிரமித்திருக்கிறது. இன்னும் சேதம் எவ்வளவு அதிகமாக ஏற்பட்டிருக்கும்—100-க்கு 25 வீதம் அதிகம் இருக்கலாம்!

"அப்படிக்கிருந்தும் ருஷ்யர்கள் தீவிரமாக சண்டையிடுகின்றனர். 20 வருஷகாலமாக இம்மாதிரியான ஜெர்மன் சாம்ராஜ்ஜிய எதிர்ப்பு இப்பொழுது வந்த விதமாகவே நேரிடும் என்று எதிர் பார்த்தார்கள். அதற்காகத் தங்கள் தேசத்தின் தற்காப்பை பலதடவைகளில் புதிப்பித்து பரீக்ஷையும் செய்து வந்ததால் எதிர்பார்த்த விதமாக இப்பொழுது பிரயோஜனமடைந்து வருகிறது. தேசத்தின் சில பாகங்களை ஜெர்மானியருக்கு விட்டுக்கொடுத்திருக்கலாம், ஆனால் சைனியம் கலையாமல் இருக்கிறது. பின்புறமாக ஜெர்மானியரை முன் விட்டு அவர்களுக்குப் பின்னால் வரும் உதவியை கெடுத்து வருகிறார்கள். சுற்றிலும் சூழப்பட்டாலும் ருஷ்யர்கள் எதிரி வசப்படவில்லை, தங்களுக்கு ஆபத்து வந்தாலும் எதிரிகளுக்கு புதிய முறையில் பயம் உண்டாக்கியிருக்கின்றனர். பூராவாக ஒரே அணிவகுப்புச் சண்டை என்பது இல்லை, 100 மைல்கள் வரையில் சைனியங்கள் நிற்கின்றன. அந்தப் பிரதேசம் பூராவும் இரு சேனைகளும் மோதிக்கொண்டு, நம்பமுடியாத விதமாகவெல்லாம் ஒருவரையொருவர் எதிர்க்கின்றன.

"இவ்விதம் செய்வதால் நாஸிகளின் முழுபலச் சண்டையும் பலிக்கவில்லை. இதனால் எதிரி வரும்பொழுது வழியில் இருக்கும் யாவற்றையும் அழித்து வருவதென்ற முறை முடியாமல் எதிரி வருவதற்குள்ளாகவே ருஷ்யர்கள் யாவற்றையும் அழிக்கிறார்கள். ஆகையால் ஜெர்மானியரின் கால அட்டவணை தவறிவிட்டது. அந்த அட்டவணைப்படிக்கு ஜப்பான், ஸ்பெயின், விஷி, முதலியவை யுத்தத்தில் ஈடுபட்டு பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தை இந்த ஆகஸ்டு மாதத்தில் எதிர்த்திருக்கவேண்டும். அதேமாதிரி கடந்த வருஷத்தில் ஆகஸ்டு மாதத்தில்

பிரிட்டனை ஜெர்மானியர் எதிர்க்கப் பார்த்து முடியாத பிசகை இப்பொழுது திருத்திக்கொள்ள உத்தேசம். அன்று பிரிட்டனை எதிர்த்த சமயம், பிரசித்தமான விடாமுயற்சியுடனும், சாதனங்களுடனும் கூடி சரியான முறைகளில் தயாரிக்கப் பட்ட ஒரு சேனைப்பகுதி ஜெர்மானியரைத் தடுத்ததுபோல், இன்று ருஷ்யர் களின் தந்திரமும், தைரியமும் நாஸி நல்லபாம்பை அடிக்கின்றன. இதனால் ஜப்பான் யுத்தத்தில் இறங்காமல் பின் வாங்கியும், ஸ்பெயின் தயக்கத்துடனும், இருக்கின்றன. இதனால்தான் பயந்து தீன நிலையிலிருக்கும் விஷி அரசாங்கத் தாரும், இதற்கு முன் தனக்கு சிநேகிதர்களான பிரிட்டனுடன் மறுபடி சண்டைக் குப் போவதைப்பற்றி பயத்துடனும் வெட்கத்துடனும் தயங்கிப் பார்க்கிறார்கள்.

“இவ்விதமாகவெல்லாம் நம் எதிரிகள் தயங்குவதெல்லாம் நமக்கு ஏற்படும் வெற்றிக்கு அறிகுறியாகும். நாம் ஜயித்து விடுவோமென்பது மாத்திரம் நிச்சயம்; எவ்வளவு சீக்கிரம் என்பது வெளிநாடுகளில் சேர்க்கப்படும் சைனிய மூஸ்தீப்பைப் பொருத்து இருக்கிறது. ரத்த வெறிகொண்ட இந்த யுத்தத்தை எவ்வளவு சீக் கிரம் யாவருக்கும் கருணை ஏற்படும்படி, முடிக்க முடியுமென்பதும் நமக்கு அனுப்பும் உதவியைப் பொருத்திருக்கிறது. ஆனால் நமக்கு ஜயம் மாத்திரம் நிச்சயம். இதுவரை என் மொழிகளைக் கேட்டவர்களுக்கு இன்று மற்றுமொரு வேண்டுகோள். சில மாதங்களுக்குமுன் சுயேச்சையான இவ்வுலகத்தாரை, நம் விரோதியைத் தொலைப்பதற்கான யாவற்றின உதவியையும் அனுப்பும்படி கேட்டுக்கொண்டோம்; இன்று இந்த யுத்தத்தை எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடிக்க லாயக்கான உதவியை வேண்டுகிறோம். ஆகையால் இதுவரை செய்து வந்ததற்கு அதிகமாகவும் வேகமாயும் உதவி தேவை. அடுத்த வருஷம் வரை பிரிட்டனிலுள்ளோர் சமாளித்து விட்டால் எல்லாம் நன்மையாகவே முடியுமென்று இவ் வருஷத்தில் நம்மால் சொல்லப் பட்டது. அந்த சாவகாசத்தை விரோதி கோருகிறன்—அவனுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டங்களை ஈடுசெய்ய அவகாசம் தேவை. இப்பொழுது பெரிய அடி அடித்தால் அவன் விழுந்து விடுவான்! அதற்காகத்தான் எல்லாம் தற்சமயம் வேண்டப் படுகிறது. இந்த உலகில் ஸ்வதந்திரம் உள்ள ஸ்திரீ புருஷன் எவரும் அதைக்கொடுக்க மறுப்பார்களா?” மாட்டார்கள்.

இதுவரை பெரிய யுத்தத்தின் திறமான சித்திரம் வரையப்பட்டது. அத னால் இவ்வுலகம் முடிவை எதிர்பார்த்துக்கொண்டு ஏன் கவலைப்படுகிறதென்பது தெரிகிறது. மிஸ்ட்டர் சர்ச்சிலும் மிஸ்ட்டர் ரூஸ்வெல்டும் சந்தித்ததின் காரண மும், ருஷ்யாவுக்கு எல்லா இடங்களிலிருந்து சீக்கிரம் அதிக உதவி அனுப்ப வேண்டியதின் அவசியமும் புலப்படுகிறது. ருஷ்யர்கள் மாரிகாலம் பூரா ஜெர் மானியரைத் தடைசெய்யலாம். ஆனால் யூக்ரேனிலும் லெனின்கிராட்டிலும் இருக்கும் பெரிய தொழிற்சாலைகள் தடைபடும். ஏராளமான சைனியங்களுக்குத் தளவாட உதவி இல்லாவிட்டால் வீணாகி விடுமாதலால் டாங்கிகள் ஸான் பிரான் ஸிஸ்கோவிலிருந்து வளாடிவாஸ்டாக்குக்கு அனுப்பப்படும். இரானில் பிரிடிஷ், இந்தியத் துருப்புகள் ஏற்கனவேயே இருக்கின்றன. எல்லா நேசதேசங்கள்,

அமெரிக்கா, பிரிடன், மற்ற இடங்கள், இந்தியா முதலிய இடங்களில் அதிகமாக குண்டுகள், யுத்த சாமான்கள், மிதியடிகள், துணிகள் மணல்பைகள், பணம் இவைகளைச் சேகரித்து உதவவேண்டும். தருணம் தவறிப்போய், பல வருஷங்கள் இந்த யுத்தம் நடக்காமல் செய்யவேண்டும்.

---

*" சமீபத்தில் போர்ட்ஸ்மௌத், பிளைமௌத், ஸௌத்தாம்டன், பிரிஸ்டல், ஸ்வான்ஸி முதலிய இடங்களைச் சுற்றிவந்தேன். இந்த யுத்தம் தாக்கிவந்த ஸ்திரீகள் குழந்தைகள் மத்தியில் லண்டனிலும் வசித்து வந்திருக்கிறேன். நாங்கள்தான் விரோதி குண்டுகளுக்கும் தீக்களுக்கும் முதல் லக்ஷியமாக இருந்தோம். இந்த அக்கிரமச்செய்கைகளின் அனுபவமே ஹிட்லரின் தீங்குகளை ஒழிக்க ஸ்வதந்திர நாடுகளை ஒன்றுசேர்க்கப் போதுமானது. கஷ்டமான அனுபவங்களிலிருந்து விடுவிப்பும் லண்டனுக்குத்தான் கியாதி வந்தது. இதன் பின் இதேமாதிரி இங்கிலாந்தின் மற்ற பட்டிணங்களும் அவஸ்தைப்பட்டன. நாங்கள் பொறுமையாக இருந்தமாதிரி அவர்களும் அமைதியுடன் இருந்தார்கள். ஆனால் இதை உலகம் அறியுமோ என்று நான் சிலசமயம் நினைத்ததுண்டு. சமீபத்தில் ஸௌத்தாம்டனில் நாஸி விமானங்கள் மேலும் கீழுமாகப் பறந்து தீக்களை மூட்டியிருக்கின்றன. அந்த இடங்களிலிருந்தோரில் சிலர்தான் உயிர் பிழைத்தார்கள். அப்பட்டிணத்தின் குறுக்கே வாய்க்கால்போல் ஒரு பாகத்தை அழித்தார்கள். இதற்கு அடுத்தாற்போல் பிளைமௌத் இருக்கிறது. நான் பிரிடிஷ் ஸ்பானிய பட்டிணங்கள் பாழாக்கப்பட்டதை பார்த்திருக்கிறேன். ஆனால் இம்மாதிரி ஒரே இடத்தில் இவ்வளவு நாசத்தை எங்கும் பார்த்ததே இல்லை. பிளைமௌத்தின் மத்திய பாகம் எரிக்கப்பட்டு ஒரே சாம்பல் பொட்டலாக இருக்கிறது. அப்படிக்கிருந்தும் சிறுவர்களும் சிறுமிகளும் மாலைவேளைகளில் சூரிய வெளிச்சத்தில் வெளியே வந்து ஸ்பானியர்களை முன்பு டிரேக் தோற்கடித்த இடத்திலிருந்துகொண்டு உத்ஸாகமாக விளையாடுகிறார்கள். அங்கே இறக்காமலோ, காயமடையாமலோ ஒருவரும் இல்லை. இருந்தாலும் டெவான் வாசிகள் பிளைமௌத்தின் பொட்டல் வெளிகளில் விளையாடுவதையும் பார்த்தேன். 'கவலையிருந்தும் உத்ஸாகம்' என்ற உணர்ச்சி இங்கிலீஷ் மக்களிடம் எப்பொழுதும் இருக்கிறது."

"பிறகு வேல்ஸுக்குச் சென்று ஸ்வான்ஸியைப் பார்த்தேன். பிளைமௌத்தைவிட நாசம் அதிகம். இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் கெடுதலடைந்த லிவர்பூலையும் பார்த்தேன். இங்கேயுள்ள கடற்கரைப் பட்டிணத்தில் உள்ள வீடுகள் நாஸிகளால் அதிகச்சேதம் விளைவிக்கப்பட்டது. உள்நாட்டுக் கடல் கரையோரமாயுள்ள பிரதேசம் மூழ்கிக்கப்பட்டது. ஒரே இடத்தில் பிளைமௌத்தைப்போல இல்லாத போனாலும் தூரப்பிரதேசத்தில் விஸ்தாரமாகச் சேதம் ஏற்பட்டது. அங்கே நடந்து செல்லும் போதுக் கூட்டம் கூட்டமாக மனிதர்கள் இடித்த இடங்களை சுத்தம் செய்கிறதைப் பார்த்தேன். ஆனால் ஒரு குட்டிச் சுவற்றின் மேல் பிரிடிஷ் கொடி பறந்து கொண்டிருந்ததை மாத்திரம் விட்டுவிட்டார்கள். லிவர்பூலின் கப்பல் தொழிற்சாலைகளில் இருந்த

ஐயர்லாந்து, வேல்ஸ், ஸ்காத்லாந்து, இங்கிலாந்து ஜனங்கள் யாவரும் அந்த சுவற்றை பூஜாக் கிருஹமாகக் கொண்டாடுகிறார்கள். இம்மாதிரியான கஷ்டங்கள் இனிவரும் காலங்களில் வரலாமென்று எதிர் பார்க்கிறோம். ஆனால் முன்மைவிட அதிகமான பொறுமையுடன் பொருத்துக்கொள்ளுவோம். ஏனெனில் பிரிஷிஷ் விமானப்படை ராக்ஷஸ அரசாங்கமான ஹிட்லர் எங்களை எதிர்த்ததிற்குத் தக்க வாறு கடுமையாக தண்டனை விதிக்கும் விதமாக ஜெர்மனிமேல் எதிர்ப்பை ஆரம்பித்துவிட்டது."

## வார யுத்தச் செய்திகள்.

30—8—41-லிருந்து 5—9—41-வரை.

**இரான்.**—இரானில் நடந்த செய்கைகள் ஆங்கில-ஸோவியத் ஒப்பந்தத்தின் பரிபூர்ண நிலையையும், சாம்ராஜ்ஜிய நாட்டின் அதிகார வலிவையும், பிரிடிஷ் தயவையும், நாஸிக் கொடுமையையும் பிரகாசப்படுத்துகின்றன. ஆங்கில-ஸோவியத் நடவடிக்கையின் வேகமும், முடிவும் உலகத்தை பிரமிக்கச் செய்தது. 24-மணி நேரத்திற்குள் பிரிடிஷ் சைனியம் அபடானிலுள்ள எண்ணெய்ச் சுரங்கங்களையும் கொர்ராம்ஷாவிலுள்ள கம்பியில்லாத் தந்தி நிலயத்தையும், பண்டர்-இ-ஷாபூரிலுள்ள வியாபாரக் கப்பல்களையும் இரானிய கப்பற்படையையும் கைப் பற்றிவிட்டது. இதன் மூலமாக வ்ளாடிவாஸ்டாக்கைவிட பத்திரமாக ருஷ்யாவுக்கு சாமான்கள் அனுப்ப முடியும். ஜெர்மனியை இதனால் பூராவாக பொருளாதார முற்றுகை சூழ்ந்துகொண்டது. ஆள் சேதமும் நஷ்டமும் குறைவாகச் செய்ததினால் பிரிடிஷ்காரரின் கருணையும் நாஸிகளின் துரோகமும் வெளியாயின. நாஸி உதவியெல்லாம் ரேடியோ ஒலிபரப்புவரையிலும் தங்கள் பத்திரத்திற்காகவும் தான் ஏற்பட்டிருந்தது. ஆனதால் ஜெர்மன் 'யாத்ரீகர்கள்' என்பவர்கள் சுயேச்சையாக விடாமல் கைதிசெய்யப்படுகிறார்கள்.

**நேசதேச முன்னேற்றம்.**—சீக்கிரமான எதிர்ப்பினால் ருஷ்யர்கள் பாயிடாக் கணவாய் பண்டர்-ஷா பஸ்லவி, மேஷட், ஹமடானையும் பிடித்தார்கள். 31வ ஸென்னாவில் ருஷ்யருடன் நேசதேசப்படை சேர்ந்துகொண்டது. இவ்விதமாக ருஷ்யர்கள் வடக்கே டப்ரீஸையும், தெற்கே பிரிடிஷ் படை அபடான், பர்ஸியன் குடா பிரதேசத்தையும் கைப்பற்றிக்கொண்டன.

**ராணுவச் சட்டம்.**—இரானியர்களின் எதிர்ப்பு ஓய்ந்து போனாலும் பந்தோபஸ்துக்காக டெஹ்ரானில் ராணுவச் சட்டம் தினசரி வேலைசெய்யும் நேரக் கணக்கு, பத்திரிகைத் தடை முதலியன அமுல் படுத்தப்பட்டிருக்கின்றன. பொதுமக்களும் பிரிடிஷ்படைக்கு சிநேக முறையில், ஆகாரம், கனி, காய்கறிகளைக் கொடுத்து

உதவுகின்றனர். "வி" வெற்றிக்கு என்ற இயக்கம் இங்கேயும் பரவி ஜெர்மானிய உத்தியோகஸ்தர்களுக்கு கவலையைச் செய்கிறது. அவர்கள் வாசஸ்தலச் சுவர்களின் பேரிலேயே எழுதப்பட்டிருக்கிறது.

**பஞ்சம்.**—எல்லா விளைபொருள்களையும் விலைக்கு வாங்கியவைகளையும் ஜெர்மானியருக்கு விற்றுவிட்டதால் பஞ்சம் வரும் நிலையில் இரான் இருக்கிறது. ஷிராஜ், இஸ்பாஹன், யெஜட், கெர்னன், ஹமடான் முதலிய இடங்களில் இதற்காகக் கலகங்கள் உண்டாகி இருக்கின்றன. குத்தகைக்காரர்களும் தங்கள் நாட்டுத் தேவையை கவனியாது கோதுமை, தேயிலை, சர்க்கரையையும் ரகசியமாக விற்றுவிட்டார்கள். பிப்ரவரி முதல் மே வரை அனுப்பிய 60,000 டன் கோதுமையை வெளியே அனுப்ப முடியாது என்று பிரிடிஷார் உறுதி சொல்லியிருக்கின்றனர். இம்மாதிரியான தீங்குகள் நேராதபடி பிரயத்தனம் செய்து இராக்கிலிருந்து நூற்றுக்கணக்கான டன் கோதுமை இறக்குமதி செய்கிறார்கள்.

**இரானுடன் சமாதான உடன்படிக்கையின் தோற்றம்.**—இங்கிலீஷ்காரர்களுக்கும் இரானியர்களுக்கும் உடன்படிக்கை பிரஸ்தாபம் இருக்கிறது. அது அரைகுறை திட்டமாக இருக்கப்போவதில்லை. இது சமயம் கெடுதி ஏற்படுவதற்கு மார்க்கம் வைத்து உடன்படிக்கை செய்வதற்கு சரியான சந்தர்ப்பமில்லை. நேசதேசத்தார்கள் இரானுடைய விச்வாசத்தாலும், அதன் வார்த்தைப்படி நடக்கும் தன்மையாலும், திருப்தியடையும்படி செய்யவேண்டும். உடன்படிக்கையின் நிபந்தனைகளில் எதிரிகளை தேசத்தைவிட்டு வெளிக்கிடத்தவேண்டும், அல்லது அவர்களை அடைத்துவைக்கவேண்டும். அமைதி ஏற்படும் வரையில் ராணுவப் படை தேசத்தில் வைத்திருக்கவேண்டியது. அதே சமயத்தில் இரானுடைய கௌரவத்திற்கும், ஸ்வதந்திரத்திற்கும் பங்கம் வராமல் செய்யவேண்டியது. எண்ணெய் கப்பம் தொடர்ந்து கட்டிக்கொண்டுவரவேண்டியது. உணவு, உடை இன்னும் வேண்டிய பொருள்களையும் தொடர்ந்து கொடுக்கவேண்டியது. இரானின் ஜாமீன்பேரில் இங்கிலாந்துக்குக் கடன் கொடுப்பதாக வாக்களிக்கவேண்டியது.

**ருஷ்ய யுத்தம்.**—இந்த வாரத்தில் ஜெர்மானியர் ஜயித்ததைக் குறித்து அதிகமாகச்சொல்லி வந்தபோதிலும் அது பொருட்படுத்தக்கூடியதாயில்லை. டாலின் காலி செய்யப்பட்டது வாஸ்தவம். ஆனால் லெனின்கிராட்டுக்கும் மாஸ்கோவுக்கும் போகும் இருப்புப்பாதை துண்டிக்கப்பட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. நீபர் நதியைத்தாண்ட ஜெர்மானியர்கள் பிரயத்தனப்பட்டது வீணாயிற்று. ஆனால் மத்திய பாகத்தில் கோனியுவின் அற்புதமான செயல்கள் ஜெர்மனியின் பாதுகாப்பின் இரண்டாவது வரிசையைத் துளைத்துவிட்டது. ஒடெஸ்ஸா இன்னும் சமாளித்து வருகிறது.

**பரித்தியாகம்.**—பெரிய நீபர் நதிக்குக் குறுக்கேயுள்ள பிரம்மாண்டமான அணையை ருஷ்யர்கள் தகர்த்துவிட்டது ஒரு பரித்தியாகம். அதோடு எதிரிக்கு வரப்போகும் அபாயங்களுக்கு ஒருஅறிகுறி. ஒரு சந்தர்ப்பத்தில் ருஷ்யா எவ்வளவு அதிகமாகப் பரித்தியாகம் செய்ய சக்தியிருக்கிறதென்று காட்டினாலும் மற்றொரு சந்தர்ப்

பத்தில் இது எவ்வளவுதான் எதிரியினால் நஷ்டமேற்படுத்த முடியுமென்பதையும் காட்டும். இந்த அணையைக்கட்ட எட்டு வருஷகாலம் பிடித்தது. ருஷ்யரின் தொழில் திறமைக்கு ஒப்பற்ற சின்னமாக இதுதான் விளங்கிவந்தது. இதிலிருந்து உற்பத்தியாகும் மின்சார சக்தியைக்கொண்டு அந்நதிக்குக் கிழக்கேயும், மேற்கேயும் ஏராளமான தொழிற்சாலைகள் இயங்கிவந்தன ; இந்நதியின் இருபுறங்களிலும் உள்ள விவசாய பிராந்தியங்களுக்கும் மின்சாரத்தைக் கொடுத்துவந்தது. யூக்ரேனின் கீழ்பாகத்தில் ஏற்பட்ட இரும்பு, தானியம் அதோடு அணையைச் சுற்றிலுமுள்ள கைத்தொழில் நஷ்டமடைந்தன. ஆனாலும் யூரல் பிரதேசத்திலுள்ள குஸ்பாஸ் ஏரியிலிருந்து விவசாயத்தையும், கைத்தொழிலையும் அபிவிருத்தி செய்து இதற்கு ஈடு செய்யலாம். நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் இவ்வளவு பெரிய ஒரு அணை திட்டம் ஐரோப்பாவில் எங்குமே கிடையாது. இத்தகைய அணையைத் தகர்க்க ஸ்டாலின் துணிவு கொண்டாரென்றால் அவருடைய மனோபாவம் எத்தகையதாயிருக்கவேண்டும்?. அணையை அழித்ததானது அவர் என்ன பரித்தியாகம் செய்தாவது சண்டையை ஜயிக்கத் தீர்மானிப்பதையும் அவருடைய கடினமான ஐதீகத்தையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது. மாஸ்கோவை எரித்து, நெபோலியனை அழியச் செய்ததைக் காட்டிலும் இந்தப் பரித்தியாகம் மிகவும் மேலானது.

எதிரிகள் லெனின் கிராட்டிலுள்ள பெரிய கைத்தொழிலைக் கண்நோக்கி முன்னேறி வருகிறார்கள். பிரதேசத்தைக் கைப்பற்றமுயன்றதும், ருஷ்யப் படையைத் துளைக்க முயன்றதும் பயனடையாமற் போகவே ருஷ்யாவுக்கு யுத்த தளவாடங்கள் செய்துகொடுக்கும் தொழிற்சாலைகளைத் தாக்கினால் பலம் குன்றுமென்று இந்த தந்திரத்தை கையாண்டிருக்கிறார்.

**உற்பத்திக்காகச் சண்டை.**—கிழக்கு முனையில் தேசங்களை ஜயிப்பதிலிருந்து உற்பத்தி செய்து ஸப்ளை செய்வதில் போர் நடக்கிறது. இரானை ஆக்கிரமித்துக் கொண்டது, பெரும்பாலும் கஷ்டத்தை குறைத்துவிட்டது. இப்பொழுது அவர்கள் சும்மாயிருக்க முடியாது. ருஷ்யா அதன்பொருட்டு சண்டையிட்டுக்கொண்டிருக்கிறதென்றும் மற்றொரு பக்கத்தில் பிரிடிஷ் விமானப்படை தாக்கிக்கொண்டிருக்கிறதென்றும் நமக்கென்னவென்று இரான் சும்மாயிருக்கமுடியாது. சண்டையை ஜயிப்பதற்கு பொருள்கள் உற்பத்தி செய்வதை அபிவிருத்தி செய்துகொண்டே இருக்கவேண்டும். அமெரிக்காவே பேருதவி செய்ய வாக்களித்திருக்கிறது. பிரிடனிலுள்ள தொழிற்சாலைகள் அல்லும் பகலும் வேலை செய்கின்றன. "பொருள் உற்பத்தி செய்தால்தான் ஜயம் பெறலாம்."

**ஜெர்மனிக்கு இடையூறு.**—சென்ற புதன்கிழமை துருக்கியிலுள்ள பிரிடிஷ் தூதர் ஸர் ஹ்யுநாச்புல்ஹ்யூகேஸன், பிரஸிடெண்டு இனோனுக்கு ஜெர்மனியின் 70,00,000 போர்வீரர்களில் 50,00,000 போர்வீரர்கள் அல்லது 17 பகுதிப் படைகள் 7,500 டாங்கிகளுடனும், 100-க்கு 60 மோட்டார் படைகளுடன் ருஷ்யப் போர்முனையில் முனைந்திருக்கிறார் என்று காண்பித்தார். அவர்களில் ஏற்கனவே 10,00,000 போர்வீரர்கள் அல்லது 100-க்கு 15 விகிதம் ஜெர்மனி

இழந்துவிட்டது. இம்மாதிரி போர்வீரர்கள் அழிந்துபோகவிடக்கூடாது. சமீபத்தில் ஹிட்லர் முஸோலினியைச் சந்தித்தபொழுது ராணுவ உதவியும், கைத்தொழில் உதவியும் தனக்கு அதிகமாகக் கொடுக்கும்படி ஹிட்லர் நிர்பந்தித்ததாக வதந்தி உலவுகிறது.

இரண்டாவது யூக்ரேனைக் கைப்பற்றியதனால் எண்ணெய் பிரச்னை தீர்ந்து விடாது. ஆனால் யூக்ரேனின் ஜனங்களைப் போஷிப்பது அவனுக்குள்ள பாகத்தை அதிகரிக்கச் செய்யும்.

உத்தியோக முறையில் கணக்கிட்டதில் பிரிடிஷ் விமானப்படையின் தாக்கு தல்களில் 4,400 டன் நிறையுள்ள வெடிகுண்டுகளைப் போட்டதினால் ஜெர்மன் பொருள் உற்பத்தி செய்வதில் மிகுந்த நஷ்டமடைந்ததாகத் தெரிகிறது.

**பின்லாந்து தேசத்தினரின் அதிருப்தி.**—வடபக்கம் சண்டையின் முழுபாரமும் அவர்கள் பேரில் போட்டு அவர்கள் வசமுள்ள சொற்ப பொருளாதாரத்தை ஜெர்மன் படைகள் புசித்து வருவதைக் கண்டு பின்லாந்து தேசத்தினர் அதிருப்தியடைந்திருக்கின்றனர்.

**ஜெர்மனிக்கு ஆபத்து அதிகரிக்கிறது.**—ஆனால் ஜெர்மனியின் எதிரிகள் எல்லைப் புறத்திற்கு அப்பால்மட்டும் இல்லை. கைப்பற்றப்பட்ட பிரதேசங்களிலும் இருக் கிறார்கள். எங்கும் பிரசாரம் இருக்கிறது. அதைத்தடுக்க எல்லோரையும் கைதி செய்ய நார்வேயில் பிரயத்தனப்பட்டது பயனில்லாமல் போய்விட்டது. பாரிஸிக் கருகில் இந்த புதிய திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர மூன்று வித மான தூக்குமேடை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறன. லக்ஷக்கணக்கான பிரெஞ்சு வாலிபர்கள் சுயேச்சை பிரெஞ்சு சைனியத்துடன் சேர ஸ்பெயின் எல்லைப் புறத்தைத் தாண்ட எத்தனித்ததில் பிடிபட்டு கைதி செய்யப்பட்டனர். போலாந்தில் எங்கு பார்த்தாலும் வேலை நிறுத்தமும் பொய் பிரசாரங்களும் நடந்து வருகின்றன. கிராகோ சர்வகலாசாலையிலிருந்து 180 புரொபஸர்களை தேசாந்திரத்திற்கு அனுப்பியதுமல்லாமல், சமீபத்தில் லவோ (Lwow) சர்வகலா சாலையிலிருந்து மீண்டும் 60 புரொபஸ்கர்கள் கைதி செய்யப்பட்டனர். மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 80 விகிதமுள்ள பல்கேரிய விவசாயிகள் அரசாங்கத் திற்கு எதிராக கலகம் செய்யத் தயாராக இருக்கிறார்கள். ருமேனியா, யூகோஸ் லாவியா, கிரீஸ் இத்தேசங்களில் பிரஜைகளுக்கு அரசாங்க முறையில் எவ்வளவு வரை அதிருப்தி இருக்கிறதோ அவ்வளவுக்களவு பஞ்சம், விஷபேதி, கணைநோய் க்ஷயரோகம், இத்தகைய வியாதிகள் பரவியிருக்கின்றன. ஆனால் ஹாலந்து தேசத் திலிருந்து, சென்ற வாரத்தில் மிகவும் பரிதாபகரமான செய்தி கிடைத்திருக்கிறது. அங்கு சமைப்பதற்கு ஹேதுவாயுள்ள ஒருவகை வாயு, மின்சார சக்தி இவைகள் தடைபட்டவுடன் ஜனங்கள் ஆகாரத்தை பச்சையாகவே சாப்பிட வேண்டிய தாயிருக்கிறது. இவர்களின் துக்ககரமான நிலைமையைப்பற்றி டாக்டர் பி. எஸ். ஜெர்பாண்டி பின்வருமாறு சொல்லுகிறார்:—

"தேசியத் தலைவர்களில் என்னுடைய சிநேகிதர்கள் பெரும்பாலும் சிறைச் சாலைக்குச் சென்று விட்டனர்; மோசக்காரர்கள் உயர்ந்த பதவியில் இருந்து

வருகின்றனர்; அநேக சர்வகலாசாலையிலுள்ள புரொபஸர்கள் சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தேசாபிமானிகள் சிறைச்சேதம் செய்யப்படுகின்றனர். சரீர தண்டனை கொடுப்பதும், ஜனங்களைச் சித்திரவதை செய்வதும் இவைகள் முக்கியமான ராஜ்ஜிய தந்திரங்களாகக் கையாளப்படுகின்றன. ஆயிரக்கணக்கான வேலையாட்களை ஜெர்மன் யுத்த தொழிற்சாலைகளில் வேலை செய்ய நிர்ப்பந்தம் அதிகமாயிருக்கிறது. ஒருவருக்கும் தெரியாமல் அறைகளுக்குள்ளேயே விசாரணைகள் நடைபெறுகின்றன; சிறைச்சாலைகள் பூராவும் நிறம்பியிருக்கின்றன; பல நூற்றுண்டுகளாக சுயேச்சையாக இருந்த நெதர்லாந்தின் ஸ்வதந்திரத்தின் அழிவு ஆரம்பித்துவருகிறது. ஐரோப்பா பூராவும் ஒரு பெரிய சிறைக்கூடமாக விளங்குகிறது. பிசாசுத் தனமான ஹிட்லருக்கு புஜபலத்தைத் தவிர தர்மம், நியாயம் தெரியாது."

**ஜெர்மனியில் சண்டை.**—ஜெர்மனி, ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்களின் கிழககிலும் மேற்கிலும் இந்த வாரத்தில் ஆகாய எதிர்ப்புகள் ஏற்பட்டன. முக்கியமாக கொலோன், மான்ஹீம், டியஸ்பர்க், டங்கர்க், செர்பர்க் இவைகளைத்தான் பிரிடிஷ் விமானங்கள் தாக்கின. பெர்லின், கோனிக்ஸ்பர்க், டான்ஸிக், மெமல் இவைகளை ருஷ்ய விமானங்கள் தாக்கின. இதனால் ஜெர்மனியின் மேற்கு பாகத்திலிருந்தும் மத்திய பாகத்திலிருந்தும் ஸெக்கோஸ்லாவியாவிற்கு சுமார் 1,00,000 ஜெர்மன் பணக்காரக் குழந்தைகள் பத்திரமாக வெளியேற்றப்பட்டன.

யுத்தம் ஆரம்பமாகி இப்பொழுது மூன்றுவது வருஷம் துவங்கியிருக்கிறது. சென்ற வருஷத்தைக் காட்டிலும் இந்த வருஷத்தில் பிரிடிஷ் விமானப்படை எதிரிகளைக் காட்டிலும் அதிகம் வெற்றிகரமாகவே இருந்துவருகிறது. இவ்வித நிலைமைக்கு அநேக காரணங்கள் உண்டு. யுத்த சாமான்களை உற்பத்தி செய்ய விடாமல் ஜெர்மன் தொழிற்சாலைகளிலும் ராணுவ நிலயங்களிலும் சென்ற பதினெட்டு மாதகாலங்களாய் பிரிடிஷ் விமானங்கள் தொடர்ந்து வெடிகள் போட்டு வருவதும், ருஷ்ய யுத்தத்தினால் கிழக்குப் போர்முனையில் ஜெர்மன் லுப்ட்வாபி மூனைந்து நிற்பதும் ஜெர்மனியுடன் ருஷ்ய விமானப்படையின் பலத்த தாக்குதலும், புதிய புதிய யந்திரங்களையும் வெடிகளையும் இன்னும் இதர ஏராளமான யுத்த சாமான்களையும் பிரிடனிலும், அமெரிக்காவிலும் உற்பத்தி செய்வதும், சென்ற பன்னிரெண்டு மாதங்களில் நல்ல பயிற்சி பெற்ற விமானிகள் முன்னைவிட இரண்டு பங்கு அதிகரித்து வருவதும், ஆகிய இக்காரணங்களால்தான். இப்பொழுது பிரிடிஷ் விமானப்படை உயர்வான நிலையில் இருந்து வருகிறது என்று சொல்லலாம். சென்ற வருஷத்தில் பிரிடன் பேரில் படையெடுத்ததில் பிரிடிஷ் விமானப்படை எதிரிகளை முன்னேற விடாமல் தகுந்தவாறு தடுத்துவந்தன. அதில் லுப்ட்வாபி படைப்பகுதிக்கு 2,375 விமானங்கள் நஷ்டம். ஆனால் 375 பிரிடிஷ் விமானிகள் மட்டில் கொல்லப்பட்டனர். ஜெர்மனியைத் எதிர்த்து தாக்குதல்களில் இப்பொழுது பிரிடிஷாருக்கு நஷ்டம் அதிகமென்றாலும், எதிரிகளுக்கும் அதேமாதிரிதான். அதாவது 4 ஜெர்மன் விமானங்களுக்கு 5 பிரிடிஷ் விமானங்கள் விதம்தான் நஷ்டம். பிரிடிஷ் விமா

னங்களில் மணிக்கு 400-மைல் வேகமும், 35,000 அடிவரை உயரப் பறக்கவும் சக்தி வாய்ந்த யந்திரங்கள் அமைக்கப்பட்டிருப்பதால், அவைகளைச் செலுத்துவதில் விமானிகளுக்கு மேல் சொல்லியபடி சேதமுண்டாகிறது. பேர்வாய்ந்த விமான சாஸ்திர நிருபர் மேஜர் ஆலிவர் ஸ்டுவேர்ட் சொல்லிய பிரகாரம் பிரிடிஷ் விமானங்கள் வேகத்தில் 10 சதவிகிதமும் உயரப் பறப்பதில் 40 சதவிகிதமும், வெடிகள் வீசுவதில் 100 சதவிகிதமும் முன்னைவிட இன்னும் அதிகமாக அபிவிருத்தி யடைந்திருக்கின்றன. அமெரிக்காவில் செய்த "போயிங்" வகுப்பைச் சேர்ந்த மிகவும் பயங்கரமான பாம்பர் விமானங்கள் பிரிடனுக்கு உண்டு.

**பிரிடனின் கடலாதிக்கம்.**—எதிரிகளுக்கு நீர்மூழ்கிகளின் எண்ணிக்கைகள் அதிகமிருந்தாலும், பிரான்ஸ் கடற்கரையில் அவர்களுக்கு அநேக கப்ப தளங்கள் கப்பல்களைத் தாக்குவதற்கு சரியான விமானப்படை இவைகள் இருந்தாலும், பிரிடிஷ் கப்பற்படை எப்போதும் போல் கடலாதிக்கத்தை யாதொரு அழிவில்லாமல் வைத்துக்கொண்டுவருகிறது. ஏனென்றால் அது கடல்மார்க்கமாய் சாமான்கள் ஏற்றிச்செல்லும் வியாபாரக் கப்பல்களுக்கு திறமையுடன் இன்னும் போதுமான உதவி அளித்துவருகிறது. தற்போதுள்ள சமுத்திரப்போரில் 100-க்கு 10-பங்கு தான் பெரிய சண்டைகள், பாக்கி சாமானியமானவைகள் தான். இரண்டாவது வருஷ யுத்த ஆரம்பத்தில் பிரிடனுக்கு கடலின் மகத்தான வெற்றிகள் கிடைத்தன. அவைகள், மடபன்முனை, டாரண்டோ, லபோடஸ் முதலிய இடங்களில் நடந்த கடல் சண்டைகளில் அடைந்த வெற்றியையும், 'பிஸ்மார்க்' என்ற ஜெர்மன் கப்பலை மூழ்கடித்ததையும் குறிக்கின்றன. பாக்கி சாமானிய சண்டைகள் அட்லாண்டிக்கில் நடந்தன. வேவு பார்ப்பதற்கும் கடற்கரை ஓரம் காவல் புரிவதற்கும் சிறிய கப்பல்களும், நாசகாரிகளும் இடைவிடாமல் சஞ்சரித்து வந்தன. சில க்ரூயிஸர்கள் மாதம் 25 நாள் வீதம் கடலில் சென்று முன்னூறு நாட்களில் 1,02,000 மைல்கள் வரை இதர கப்பல்களுக்கு காவல் புரிந்து வந்தன. 6,00,000 சதுரமைல்கள் விஸ்தாரமுள்ள சமுத்திரத்தைப் பாதுகாப்பதில் எதிரி 'யூ' படகுகளுடன் 256 தடவைகள் சிறு சண்டைகள் போட்டும் விரோதி கப்பல்கள்மீது 710 தடவை தாக்கியும், 7,500 கப்பல் கூட்டங்களுக்கு துணை செல்லும்போது 27,000 தடவைகள் எதிரி விமானங்களை எதிர்த்து யுத்தம் செய்தும், விரோதிக்கு வந்த 2,40,000 டன் நிறையுள்ள பொருள்களை மூழ்கடித்தும், 400 லக்ஷம் மைல்கள் அதாவது சூரியன் இருக்கும் உயரத்திற்குக் கிட்டதட்ட பாதி உயரம் வரையுள்ள தூரம் சென்றும் இவ்விதமாக பிரிடிஷ் விமானப்படை கப்பற்படைக்குச் சாதகமாக ஒத்தாசை செய்து வந்திருக்கிறது.

# யுத்தக் குறிப்புகள்.

**முன் ஜாக்கிரதை.** இரான் விஷயத்தில் ஜெர்மானியருககு ஒரு பெரும் தோல்வி. ஜெர்மனிக்கு அதிக ஆள் சேதம் ஏற்படாத போனாலும், நேசதேசங்களுக்கு ஒரு முக்கிய வெற்றி. ஆகஸ்டு மாதம் மூன்ருவது வாரத்தில் நாம் எடுத்துக்கொண்ட தீர்மான நடவடிக்கையின் பயனாக ஷாவின் அரசாங்கம் அதிகத் தொல்லையில்லாமல் சமாதானத்திற்கு வந்து விட்டது. இந்த சம்பவத்தில் ஒரு பாரஸீக மாலுமித் தலைவனும், மற்றும் சில ருமே இருபக்கங்களிலும் காயமடைந்தனர். ஆனால் ஜெர்மானிய திட்டங்களும் பிரசித்தியும் மங்கிவிட்டன. ஆகவே மத்தியக்கிழக்கில் அச்சுநாடுகளின் சூழ்ச்சிக்கு லக்ஷியமான பாகம் நம் வசம் வந்துவிட்டது. இராக்கிலும் ஸிரியாவிலும் நேர்ந்த உயிர் சேதமும், தொந்தரவும்போலில்லாமல் இரானில் அமைதியாகவே முடிந்தது. எதிரி வசமிருந்து எண்ணெய் முதலிய சாமான்கள் கைப்பற்றப் பட்டன; (இல்லாவிடில் இரானே எதிரிக்கு ஒப்படைக்க மறுத்திருக்காது). ருஷ்யச் சைனியங்களுக்கு சீக்கிரத்தில் அதிகச் சாமான்கள் அனுப்ப ஒரு கிட்ட மான பாதை திரக்கப்பட்டது; இவ்விதமாக பாரஸீகத்தில் பிரிடிஷ், ருஷ்யத் துருப்புகள் ஒன்று சேர்ந்து இருப்பதினால், கீழ்திசையில் ஹிட்லர் போட்டிருந்த திட்டங்கள் பலிக்காமல் போய் மேற்கு ஆபிரிக்கா முதல் வ்ளாடிவாஸ்டாக்வரை சைனியங்கள் தொடர்ச்சியாக நிற்கின்றன.

இதனால் பிரிடிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாக இந்நாட்டில் தூஷித்து கிளர்ச்சி செய்பவர்கள், இந்திய ஜனங்களும் அரசாங்கமும் நிலைக்கவேண்டுமானால் இவ்விதமாக அரசாங்கத்தார் தற்காப்பு செய்யாவிட்டால் என்ன செய்வார்களோ!

**அட்லாண்டிக் சாஸனம்.** ஆகஸ்டு 24-ல் மிஸ்ட்டர் சர்ச்சில் செய்த ஒலிபரப்பு, சர்ச்சில்—ரூஸ்வெல்டு சந்திப்பிற்கு பிறகு வெளிவந்த 8 விஷயங்களின் விஸ்தரிப்புத்தான். இதை இரண்டுவிதமாக வியாக்கியானம் செய்கிருர்கள். (இதில் அச்சுநாடுகள் அடங்கவில்லை, ஏனென்ருல் வழக்கம்போல் அவர்கள் இதை நிந்திக்கத்தான் செய்வார்கள்) ஒரு திரப்பாளர் இவ்வறிக்கை திருப்திகரமாக இல்லை என்று அபிப்பிராயப்படுகிருர்கள். இது அதிக ஸ்வதந்திரங்களை உட்கொண்டிருக்கிறதென்று மற்றும் சிலர் பயப்படுகிருர்கள். இரண்டாவதாகச் சொல்லப்பட்டவர்கள் முக்கியமாக அமெரிக்காவில் உள்ள ஐஸோலேஷன் கக்ஷிக்காரர்கள்தான். ஆனால் பத்திரிகைகளைக் கவனித்து பார்க்கும்போது இக்கக்ஷிக்கு நாட்டில் செல்வாக்கு குறைந்து வருகிறதாகத் தெரிகிறது. முன் சொல்லப்பட்டவர்கள் மிஸ்ட்டர் சர்ச்சிலின் வியாக்கியானத்தால் திருப்தியடைவார்கள். நாடு சம்பந்தமோ, மற்றவிதமாகவோ பிரிடனும் அமெரிக்காவும் ஆக்கிரமிப்பு எண்ணம் இல்லாதவர்கள் என்று ஒரு விஷயம் கண்டிருக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்ஜிய நாடுகளுக்கு இது புதிதாக இல்லாதபோனாலும், நடுநிலை நாடுகளின் அபிப்பிராயங்களில் சரியான மாறுதலைச் செய்தும் அமெரிக்

காவில் மிஸ்ட்டர் ரூஸ்வெல்டிற்குச் சாதகமாக பொதுமக்களின் அபிப்பிராயங் களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதுவரை அமெரிக்க மக்கள், லின்டன்பர்க், வீலர் போன்ற ஜெர்மானியரின் பயமுறுத்தல்களைக்கண்டு தயக்கமாக இருந்தனர். அடுத்தபடியாகச் சொல்லவேண்டியது என்னவென்றால் இந்த யுத்தம் ஜயிக்கப் பட்ட பிறகு வருங்காலத்தில் இம்மாதிரியான யுத்தங்கள் நிகழாது என்று மிஸ்ட்டர் சர்ச்சில் வீணெண்ணம் கொள்ளவில்லை. பொதுமக்களின் அஜாக்கிர தையினால்தான் இந்த யுத்தம் நடந்ததென்றும் இனிமேல் ஜெர்மானியர் வெறி பிடித்துத் திரியாமல் இருக்கவேண்டுமென்றும் அவர்களுக்குக் கவலை! தற்சமயம் ஆக்கிரமணம் செய்துகொண்டுவருபவர்கள் ஆயுத பரிஹரணம் செய்யும்படி ஜனநாயகத் தலைவர்கள் நிர்ப்பந்திப்பது ஐரோப்பாவில் நசுங்கிக் கிடக்கும் 5, 6 நாடுகளுக்குத் திருப்திகரமாகவும் பிரிடிஷ் சாம்ராஜ்ஜிய நாடுகளையும் அமெரிக்காவையும், ஒத்துழைக்க கூப்பிடும் சங்கநாதம் போலும் இருக்கும்.

இந்த ஒப்பந்தத்தினால் "பிசாசு விரட்டப்பட்டது—கொடுங்கோல் அரக் கர்கள் அடக்கப்பட்டார்கள்" என்று கருணை வாய்ந்தோர் போற்றுவார்கள். இதில் கண்டுள்ள பொருளாதார ஸ்வதந்திரங்களுக்கு ஜெர்மானியரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பிஸ்மார்க் 70-வருஷத்திற்குமுன் சொன்னமாதிரி பிரான்ஸை ரொம்பக் கசக்கி முகர்ந்து பார்க்கக்கூடாது. அதாவது அடியோடு அவர்களை அழித்துவிடக்கூடாது.

**இவ்வொப்பந்தம் இந்தியாவுக்கும் அன்வயிக்கும்.**

தானம் கொடுத்த மாட்டின் பல்லைப் பிடித்துப் பார்க்கும் விதமாக, இந்திய விபரீதக் கக்ஷிக்காரர்களும், ஒத்துழையாமை இயக்கத் தில் ஈடுபட்டவர்களும் "இதெல்லாம் அழகுதான்! இந்தியாவுக்கு அன்வ யிக்குமா"? என்று கேட்கிறார்கள். நிச்சயமாக அன்வயிக்கும். "எல்லா" தேசங்களுக்கும் இது ஒப்பும் என்று பிரதம மந்திரியும் விசேஷமாக வற்புறுத்தி யிருக்கிறார். அமெரிக்காவில் யுத்தத்தில் சம்பந்தம் வேண்டாமென்றிருப்பவர் களும், பிரிடிஷ் லேபர் கக்ஷிக்காக மிஸ்ட்டர் அட்லியும், நேற்றுவரை சந்தேகம் வாய்ந்த ஸோவியத் பத்திரிகைகளும், எகிப்து, துருக்கி, ஐயர்லாந்தும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த அறிக்கையின் அமைப்பையும் விஷயங்களையும் கண்டு சந்தோஷப்பட்டால் இந்தியா மாத்திரம் குதர்க்கமும் தூஷணையும், செய்வது தவறாகும். சரியான பிரசாரம் என்ற போர்முனையில் முன் சொன்ன சாஸனம் எதிரிகளுக்கு முன்னதாகவே செய்யப்பட்டு உலகத்தார் மனதைக் கவர்ந்து விட்டதைக் காதுகொடுத்துக்கேட்காமல் இருப்பதும் தவறு.

**பெரிய யுத்தம்.**

இந்த வாரத்திய தலை அங்கம், ஜெர்மானி யரை ருஷ்யர்கள் பிரமாதமாகத் தாக்குவதை பிரசித்தமான பத்திராதிபரின் மொழிகள் மூலமாக துலக்குகிறது. மூன்றாம் தடவையாக ஜெர்மானியர் கடுமையாகத் தாக்கிவருவதைப் பார்க்கும்போது இந்தத் தடவை முடிந்தவரை முன்னேறப் பார்ப்பார்கள் என்றும் நமக்கும் தெரியும். ஏனென்றால் மாரிகாலம் வருவதற்குள் பெரியதொரு வெற்றியடையப் பார்க்கிறார்

கள். ஏற்கனவே இறக்கும் ஜெர்மானியரின் கணக்கைப் பார்த்துவிட்டு ஜெர்மன் மக்கள் மனம் தளர்ந்திருக்கிறதென்று நடுநிலை நாடுகள் ஊகித்திருப்பதால், இந்த ருஷ்யச் சண்டையில் ஏதாவது பின்வாங்குவதாகத் தெரியவந்தால் அது ஜெர்மானியருக்கு நிச்சயம் அதிக கலகத்தைத் செய்யும். லெனின்கிராட்டிலிருக்கும் ஆபத்தையும், (பால்டிக் கடலில் உள்ள ருஷ்ய கப்பற்படையைப் பற்றியும்) நடுபாகத்தில் ஜெர்மானியர் வெற்றியடைந்தால் ஏராளமான சைனியத்தைக்கொண்டு புடன்னியின் தைரியமான பகுதி ஆழப்பட்டுவிடுமென்றெல்லாம் கவலைக்கு இடம் உண்டு. ஆனால் இவ்விதமாகச் செய்துமுடிக்க 100-க்கு 80 வீதம் அவர்கள் சைனியத்தை சேகரம் செய்து போர்முனைக்கு அனுப்பியதால், நாம் கொஞ்சம் தைரியத்துடன் இருந்தால் போதுமானது ! மேலும் ருஷ்யர்களின் ராணுவங்களோ, அரசாங்கமோ கலைபடவில்லை. எதிரிக்கு மறைமுகமாக உதவவோ, தோற்றுப்போவோமென்ற எண்ணமோ ருஷ்யர்களுக்குள் இல்லை. ருஷ்யர்கள் கையாளும் பூ தகன முறையும், வரவர ஜெர்மன் போக்குவரவு விருத்தியாவதும் ஹிட்லருக்கும் அவன் உத்தியோகஸ்தர்களுக்கும் கவலையைச் செய்கிறது. 18 வாரங்களில் செய்துமுடிக்க வேண்டியதில் 8 வாரங்கள் பாக்கி இருக்கின்றன. மாரிகாலமும் வருவதால் ருஷ்யர்களுக்கு சாதகம்தான். முதலில் வடக்கே ஆரம்பித்து தெற்கு நோக்கி வருகிறதால் ஜெர்மானியரின் முன் சொன்ன 100-க்கு 80 சாமான்களை எங்கேயாவது கொண்டுபோய் சண்டை செய்ய வேண்டியதுதான். அதுவும் முடியாது. ஏனென்றால் பிரிடிஷ் விமானங்களும், ஜெனரல் வேவல், ஜெனரல் ஆசின் கிளர்க் முதலியோரும் தெற்கிலிருந்து சென்று தடுத்துவிடுவார்கள்.

**ஜப்பான்.** தாய்லாந்து இன்னும் ஆக்கிரமிக்கப்படவில்லை. ஜப்பானுடைய யுத்தம் பேச்சுக்கள் சற்று மட்டடைந்திருக்கின்றன. ஆனால் நிரந்தரமான மாறுதல் ஏற்பட்டதாகக் காணோம். தனிமையில் பிரமாதமான மாறுதல்கள் அங்கே காணப்படுகின்றன. ஆகவே ஜப்பானிய சாம்ராஜ்ஜிய அரசாங்கத்தாருக்கும் நேசதேசங்களுக்கும் "சமாதானப்" பேச்சுவார்த்தை ஏற்படாதென்று சொல்லிவிடலாம். ஏனென்றால் பிரிடிஷ், அமெரிக்கா அறிக்கைகள் ஏதோ மிரட்டலோடு நின்றுவிடும் என்று ஜப்பான் நினைத்துக்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பித்துவிடலாம் என்று நினைக்கிறது. நேசதேசங்கள் ஒரே தீர்மானமாய் இருப்பதாலும், பொருளாதாரக் கட்டுப்பாடு ஜப்பானுக்கு விரோதமாயிருப்பதாலும் ஜெர்மனியினால் உத்ஸாகப்படுத்தப்பட்டாலும் ஜப்பானிய ஆக்கிரமணத்திற்கு தடை ஏற்பட்டிருக்கிறது. பிரிடன் வேறு இடங்களில் கவனம் செலுத்திவருவதும், அமெரிக்கா அனாவசியமாக சண்டையை விரும்பாமல் இருப்பதும் ஜப்பானுக்குத் தெரியும். ருஷ்ய–பிரிடிஷ் ஒற்றுமையால், சைனாவில் உள்நாட்டுக் கலகங்கள் இல்லாமல் சேனை தைரியமாக இருக்கிறதென்றும் அவர்களுக்குத் தெரியும். ஆனால் ருஷ்யாவை ஜெர்மனி ஜயித்துவிடுமென்ற நம்பிக்கை ஜப்பானுக்கு இல்லை. தாய்லாந்தையும் பர்மா ரோடையும் பிடித்து பஸிபிக்கில் யுத்தத்தை துவக்கினால் பிரிடனும் அமெரிக்காவும் என்ன நேர்ந்தாலும் நேரட்டுமென்று பழிவாங்க யுத்தத்தில் இறங்கிவிடுமென்றும் (கடைசியாக) நிச்சயமாகத் தெரியும். ஆகவே

அவ்வளவு கொடூரமாக இல்லாதபோனாலும் பேராசை அதிகம்கொண்ட கக்ஷியார் கொஞ்சம் பழைய வழிகளுக்கு மாற்ற உத்தேசிக்கின்றனர். இம்முறையால் யுத்தமில்லாமல் எல்லா விதத்தாலும் அதிக நாடுகளும், பொருளாதார வழிகளில் பலமும் அடைய முயற்சி செய்கின்றன. அதனால்தான் தாய்லாந்து பூராவாக தப்பிவிட்டதென்று சொல்வதற்கில்லை. மேலும் நேச அரசாங்கங்கள் தீர்மான மான முடிவுக்கு வருவதையும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. இனி ஜப்பானுக்கு சண்டை உணர்ச்சி ஒரு மாதத்திற்கு முன் பரிபக்குவமானாலும் சண்டையில் இறங்க தக்க சமயம் இனி வாய்க்காமல் போகலாம்.

**விமான எதிர்ப்புகளின் தத்துவம்.** இந்த சாஸ்திரத்தில் சமீபத்தில் ஏற்பட்ட சில மாறுதல்களை தெரிந்துகொள்வது நலம். வீசப்படும் குண்டுகளின் எண்ணிக்கையை பொருட்படுத்தாமல் அவைகளின் நிறையைத்தான் அதிகம் கவனிக்கவேண்டும். ஆகையால் கொஞ்சமான பாம்பர் விமானங்கள் சில பெரிய குண்டுகளைத் தூக்கியே செல்லுகின்றன. அதிக உயரத்திலிருந்து கனமான குண்டுகளை (அமெரிக்க குறிக் கண்ணாடிகளின் உதவியால்) வீசினால் கீழே நிச்சயமாக சேதம் விளைவிக்கின்றன. பல சிறிய குண்டுகளை தொழிற்சாலைகள் போன்ற விஸ்தாரமான இடங்களில் பிரயோகம் செய்வது மேலானது என்று நினைப்பது பிசகு. ஏனென்றால் கனமான குண்டு எரிந்தால் தொழிற்சாலையும் பொதுமக்கள் உள்ள தற்காப்பு ஸ்தலங்களும் அடியோடு உடைக்கப்படுகின்றன. அடிபட்ட இடத்திலிருந்து ஆயிரக்கணக்கான அடிகள் வரையில் தொழிற்சாலைக் கட்டடம் சிதறிப்போய்விடுகிறது!

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 25—8—41. (திங்கட்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | இரவில்.—அட்லாண்டிக் (Atlantic) துறை முகங்கள்—கலே (Calais) முதல் பொலாயின் (Boulogne) வரை. | …… | பெருந்தீக்களும் வெடிகளும் கிளம்பின. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **25—8—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், யுத்த தளவாடங்கள் சேமித்திருக்கும் கிட்டங்கிகள்—*ட்ரிபோலி* (Tripoli). | ...... | *தீப்பிடித்தன.* |
| | கோட்டை, மின்சார உற்பத்திசாலை, ரயில்வண்டிகள் நிற்குமிடங்கள், விரோதிகள் தங்குமிடம்-*பெங்காஸி* (Benghazi). | ...... | ...... |
| | துறைமுகம், கப்பல்கள் பெட்ரோல் கிட்டங்கிகள்—*பார்டியா* (Bardia). | ...... | *தீப்பிடித்தன.* |
| | யந்திர சாதன வண்டிகள்—*ராஸுனு* (Rasuenna). | 3 *விமானங்கள்.* | ...... |
| | **ஸார்டீனியா (Sardinia).** | | |
| | ராணுவ லக்ஷியங்கள்—*டெம்பியோ* (Tempio). | *நஷ்டமில்லை.* | 2 *விமானங்கள்.* |
| | **இரான் (Iran).** | | |
| | விமான ஒத்தாசை—*முன்னேறும் நேச தேசத் துருப்புகளுக்கு.* | ...... | ...... |
| | துண்டுப் பிரசுரங்கள்—*டெஹ்ரான்* (Teheran). | ...... | ...... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி காலாட்படை, விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—*யுத்தரங்கம் பூராவும்.* | 18 *விமானங்கள்.* | 93 *விமானங்கள்.* |
| **26—8—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.—துணைக்கப்பல்—*பிரிஸியன்* (Frisian) *தீவுகளுக்கு அருகில்* | ...... | *ஒரு கப்பல் தீப்பிடித்தது; மற்றொன்று தாக்கப்பட்டது;* 1 *விமானம்.* |
| | மற்றொரு துணைக்கப்பல்—*டச்சு* (Dutch)*க் கடற்கரைக்கு அருகில்.* | ...... | 1 *கப்பல் மூழ்கடிக்கப்பட்டது;* 3 *கப்பல்களுக்குச் சேதம்.* |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **26—8—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி. | | |
| | **விமான நிலயமும், கட்டடங்களும்**—*ஸெயிண்ட் ஓமர்* (St. Omer). | ...... | *கட்டடங்கள் தாக்கப்பட்டன.* |
| | **விரோதி விமான நிலயங்களும், தரையில் இருக்கும் விமானங்களும்**—*செர்பர்க்* (Cherbourg) *பிரதேசத்தில்.* | ...... | *தரையிலிருக்கும் அநேக விமானங்கள் சேதமாயின.* |
| | **விமான நிலயம்.**—*பெல்ஜியன்* (Belgiam) *கடற்கரைக்கு அருகில்.* | 7 *பகல் பாம்பர் விமானங்களும்,* 4 *பகல் பைடர்களும்.* | *சேதமாயின.* |
| | **காவல் புரியும் விரோதிக் கப்பல்கள்**—*கலே* (Calais)*க்கு அருகாமையில்.* | ...... | 1 *விமானம்.* |
| | **இரவில்.—தொழிற்சாலைகள் இருக்குமிடங்கள்.**—*கொலோன்* (Cologne). | ...... | ...... |
| | **கப்பல் துறைகள்.**—*லஹாவர்* (Lehavre), *பொலாயின்* (Boulogne). | 3 *இரவு பாம்பர் விமானங்கள்.* | ...... |
| | **விரோதி விமான நிலயங்கள்.**—*வட பிரான்ஸ்* (France). | ...... | 1 *பைடர் விமானம்.* |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | **விரோதி ஸ்தலங்கள்.**—*வுல்சிபிட்* (Wolchefit), *கோண்டர்* (Gondar). | ...... | ...... |
| | **யுத்த சாமான்கள் வைக்கும் கிடங்குகள், கம்பியில்லாத் தந்தி நிலயம், கப்பல் துறைகள்.**—*ட்ரிபோலி* (Tripoli), *பெங்காஸி* (Benghazi). | ...... | *தீக்களும், வெடிகளும் கிளம்பின.* |
| | **விரோதி யந்திர போக்குவரத்து சாதனங்களின் கூட்டம்.**—*ராஸ்யூனு* (Rasuenna)*க்கு அருகாமையில்.* | ...... | *அநேக கப்பல்கள் சேதமாயின.* |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | **விரோதி விமானங்களும், சைனியங்கள் நிற்குமிடமும்.—போர்** *அரங்கம் பூராவும்.* | ...... | 37 *விமானங்கள்.* |
| | **இரான் (Iran).** | | |
| | *ருஷ்ய நிலப்படைகளுக்கு* **விமான உதவி.** | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**26—8—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

பிரிடிஷ் விமானங்களால்.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | |
|---|---|---|---|
| | விமானப்போர்.—*மத்தியதரைக்கடல்* (Mediterranean). | ...... | 3 *விமானங்கள்.* |
| | விரோதிக் கப்பல்கள்.—*மத்தியதரைக் கடலின்* (Mediterranean) *மத்தியில்.* | ...... | 1 *கப்பல் மூழ்கடிக் கப்பட்டது. மற்றொன்று தாக்கப் பட்டது.* |

**27—8—41.** (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | மான்ஹீம் (Manheim), இன்னும் இதர தொழிற்சாலைகள்.—*மேற்கு ஜெர்மனி* (Germany). | ...... | *சேதமாயின.* |
| | கப்பல் துறைகள்.—*பொலாயின்* (Boulogne), *ஆஸ்டெண்டு* (Ostend), *டங்கர்க்* (Dunkirk). | *நஷ்டமில்லை.* | ...... |

கிரீஸ் (Greece).

| | | | |
|---|---|---|---|
| | விமான நிலயங்கள்.—*கிரீஸ்* (Greece). | *நஷ்டமில்லை.* | *விமானம் தாங்கிகள் சேதமாயின.* |

கிரீட் (Crete).

| | | | |
|---|---|---|---|
| | விமான நிலயம்.—*ஹெராக்லியான்* (Heraklion). | *நஷ்டமில்லை.* | *சேதமாயின.* |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | துறைமுகம்.—*பெங்காஸி* (Benghazi). | ...... | *தீக்கள் மூட்டப் பட்டன.* |
| | துறைமுகம், பெட்ரோல் கிட்டங்கி.—*பார்டியா* (Bardia). | ...... | *தீப்பிடித்தன.* |
| | விரோதிச் சைனிய வாஸஸ்தலங்கள்.—*ஹாம்ஸ்*(Homs) *க் கருகாமையில்.* | ...... | *ஒரு கட்டடம் நொறுக்கப்பட்டன.* |
| | நாசகாரிகளால் துணைபுரியப்பட்ட நாலு வியாபாரக் காவல்கப்பல்கள். | ...... | *ஒரு கப்பல் தீப்பிடித்தது.* |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **27—8—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி சைனியங்கள் காலாட்படை, பீரங்கிப்படை.—*போர் அரங்கம் முழுவதிலும்.* | 23 *விமானங்கள்.* | 66 *விமானங்கள்.* |
| **28—8—41.** (வியாழக்கிழமை) | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில் கப்பல் துறைகள், கப்பல்கள் கப்பல் துறையிலுள்ள கட்டடங்கள்.—*ராட்டர்டாம்* (Rotterdam). | 7 *பாம்பர்களும்.* 5 *பைடர்களும்.* | ...... |
| | விமான எதிர்ப்புகள்.—*வட பிரான்ஸ்* (France). | | ...... |
| | இரவில்.—தொழிற்சாலைகளுள்ள இடங்கள், ரயில்வண்டிகள் தங்கும் முக்கியமான இடங்கள், ரயில்வே ஸ்டேஷன், உள்நாட்டுக் கப்பல் கட்டுமிடங்கள்.—*டூயிஸ்பர்க்* (Duisburg). | ...... | ...... |
| | ராணுவ லக்ஷியங்கள்.—*மேற்கு ஜெர்மனி* (Germany). | ...... | ...... |
| | கப்பல் துறைகள்.—*ஆஸ்டெண்டு* (Ostend). | 9 *விமானங்கள்.* | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்.—*பார்டியா* (Bardia). | ...... | ...... |
| | தாக்கும் வேவு விமானங்கள்.—*ஸிரெனேகா* (Cyrenaica). | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | இரண்டு விரோதிக் கப்பல்கள்.—*மத்தியதரைக்கடலி*(Mediterranean)*ன் மத்தியில்.* | ...... | *இரண்டு கப்பல்களும் நேராகத் தாக்கப்பட்டன.* |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **28—8—41.** | (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | கிழக்குப் போர்முனை. | | |
| | விரோதி யந்திரப்படை, காலாட்படை, பீரங்கிப்படை.—போர் அரங்கம் பூராவும். | ...... | 29 விமானங்கள். |
| | ஜெர்மனி (Germany). | | |
| | கோனிஸ்பர்க் (Koenigsberg). | ...... | ...... |
| | பால்டிக்(Baltic) கடல். | | |
| | ஜெர்மன் சாமான் ஏற்றிச்செல்லும் கப்பல்கள்.—பால்டிக்(Baltic) கடல். | ...... | 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. |
| **29—8—41.** | (வெள்ளிக்கிழமை). | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France), பெல்ஜியன் (Belgian) கடற்கரை, இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 10 பகல் பைடர்கள். | 8 பகல் பைடர்களும், 2 பாம்பர்களும். |
| | இரவில்.—தொழிற்சாலைகள் உள்ள ஜில்லாக்கள்.—பிராங்க்பர்ட் (Frank furt), மான்ஹீம் (Manheim). | 5 விமானங்கள். | சேதமாயின. |
| | கப்பல் துறைகள், இருப்புப் பாதைகள்.—லஹாவர் (Lehavre). | | ...... |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | துறைமுகம், கப்பல்கள், ஸ்பானிஷ் துறைமுகமேடு.—ட்ரிபோலி (Tripoli). | ...... | எங்கும் ஒரே தீ. இரண்டு கப்பல்கள் தாக்கப்பட்டு தீப் பிடிக்கப்பட்டன. |
| | துறைமுகம் ஒரு கப்பல்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | விமான நிலயம்.—பெர்க்கா (Berka). | ...... | பீரங்கித் தாக்குதல்கள். |
| | பெட்ரோல் கிட்டங்கிகள்.—பார்டியா (Bardia)வுக்கும் வடக்கே. | ...... | தீக்கள் மூட்டப்பட்டன. |
| | விரோதி சைனியங்கள் இருக்குமிடங்கள்.—டெபரெக்(Debarech). | 1 விமானம். | ...... |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **29—8—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **ஸிஸிலி (Sicily).** | | |
| மின்சார உற்பத்திசாலைகள்.—*லிகாட்டா* (Licata). | ...... | *பலத்த சேதம்.* |
| **ருஷ்ய விமானங்களால்.** | | |
| **கிழக்குப் போர்முனை.** | | |
| காலாட்படை, யந்திரப்படை, தரையிலிருக்கும் விமானங்கள்.—*யுத்த அரங்கம் பூராவும்.* | ...... | ...... |
| **30—8—41.** (சனிக்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| பகலில்.—விமான எதிர்ப்புகள்.—*பிரான்ஸ்* (France), *பெல்ஜியம்* (Belgiam) *கடற்கரையில், இங்கிலீஷ் கால்வாய்* (English Channel). | ...... | ...... |
| விரோதி கப்பல்கள்.—*இங்கிலீஷ் கால்வாய்* (English Channel) | ...... | *2 விமானம் எதிர்ப்பு பீரங்கிக் கப்பல்கள் தீப்பிடிக்கப்பட்டன.* |
| எதிரிக் கப்பல் போக்குவரத்து.— *நார்வே* (Norway) *சமுத்திரக்கரைக்கு அப்பால்* | ...... | *1 கப்பல் தாக்கப்பட்டது. 3 விமானங்கள் மொத்த நஷ்டம்.* |
| இரவில்.—கப்பல் துறைகள் — *செர்பர்க்* (Cherbourg). | ...... (2 *விமானங்கள்.*) | ...... |
| கரைப் பாதுகாப்புகள்.—*டச்சு* (Dutch)*க் கரைக்கருகில்.* | 2 *விமானங்கள்.* | ...... |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| துறைமுகம், கப்பல் போக்குவரத்து—*ட்ரிபோலி* (Tripoli). | ...... | *மிகச்சேதம்.* |
| கோட்டைகள், குடிசைகள், அகிழ்கள்—*டெபரெக்* (Debarech). | ...... | ...... |
| ஒரு வியாபாரக் கப்பல்.—*லாம்பிடுஸா* (Lampedusa) *தீவுக்கருகில்.* | ...... | *மூழ்கடிக்கப்பட்டது.* |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **30—8—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | கிழக்குப் போர்முனை. | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களில் உள்ள விமானங்கள், எதிரிப் படையின் இருப்பிடங்கள்—*போர் அரங்கம் பூராவும்.* | 16 *விமானங்கள்.* | 75 *விமானங்கள்.* |
| **31—8—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள் — *வட பிரான்ஸ்* (France), *இங்கிலீஷ் கால்வாய்* (English Channel). | ...... | ...... |
| | கைத்தொழில் பிரதேசம்—*லிலி* (Lily)*ப் பிராந்தியம்* | ...... | ...... |
| | ஒரு ஜெர்மன் விமான நிலயம்—*லானியன்* (Lannion) | ...... | *சேதம்.* |
| | ரயில்வே போக்குவரத்து சாதனங்கள்—*ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில்.* | ...... | ...... |
| | கப்பல் கட்டுமிடங்கள்—*லடிரயிட்* (Letrait). | ...... | ...... |
| | ராணுவ லக்ஷியங்கள்-ப்ரேமன் (Bremen). | 2 *பைடர்கள்.* | 1 *பைடர் விமானம்* |
| | இரவில்.—க்ருப்ஸ் (Krupps) வேடிமருந்து செய்யும் தொழிற்சாலைகளும், இதர தொழிற்சாலை லக்ஷியங்களும்-*எஸ்ஸன்* (Essen). | ...... | *சேதமாயின.* |
| | கைத்தொழிலுள்ள ஜில்லா—*கொலோன்* (Cologne). | ...... | ...... |
| | கப்பல் துறைகள்—*பொலாயின்* (Boulogne). | 7 *பாம்பர்கள்.* 1 *பைடர்.* | *தீ மூட்டப்பட்டன.* |
| | வேடி கண்ணிகள்வைப்பது—*எதிரி கடல்களில்.* | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகமும், கப்பல் போக்குவரத்தும்.—*ட்ரிபோலி* (Tripoli). | ...... | *தீக்களும் வெடிகளும் கிளம்பின.* |
| | பெட்ரோல் கிடங்குகள்.—*பார்டியா* (Bardia)*க் கருகில்.* | ...... | *தீ மூட்டப்பட்டது.* |

| தேதி. | லக்ஷியங்கள். | | பிரிடிஷ் எதிரிகளின் நேசதேச விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் நஷ்டம். விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **31—8—41.** | (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **ரோட்ஸ் (Rohdes) தீவுகள்.** | | |
| | **விமான நிலயமும், விமானங்களும்.**—*மாரிட்ஸா* (Maritza). | ...... | *அநேக விமானங்கள் சேதமாயின.* |
| | **விமான நிலயம்.**—*கலாடோ* (Calato). | ...... | *தீக்களும் வெடிகளும் கிளம்பின.* |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | **விமானச் சண்டைகள், காலாட்படை, டாங்கிகள்.**—*யுத்த அரங்கம் பூராவும்.* | 22 *விமானங்கள்.* | 23 *விமானங்கள்.* |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த போலந்து, பால்டிக் நாடுகள்.** | | |
| | **ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்.**—*பெர்லின்* (Berlin), *கோனிஸ்பர்க்*(Konigsberg), *டான்ஸிக்*(Danzig), *மெமல்* (Memmel). | 1 *விமானம்.* | *எங்கும் பெருத்த சேதம்; தீக்களும் வெடிகளும் கிளம்பின.* |

## *விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.*

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **26—8—41.** | (செவ்வாய்க்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | **இரவில்.**—இங்கிலாந்தி (England)ன் *சில தனிப்பட்ட இடங்களில் சொற்ப விமான எதிர்ப்பு.* | 1 *விமானம்.* | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | **ஸைப்ரஸ்** (Cyprus). | 1 *விமானம்.* | *சொற்பச்சேதம்.* |
| | **மால்டா** (Malta). | 3 *விமானங்கள் அநேகம் சேதமாயின.* | *சேதமில்லை.* |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசநேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **26—8—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஸில்லி (Scilly).** | | |
| | ஸில்லி (Scilly)த் தீவுகள். | ...... | 2 பேர் கொல்லப் பட்டனர்: 7 பேர் காயமடைந்தனர். |
| **27—8—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக்கரை ஓரத்தில். | ...... | சேதமுமில்லை ஒருவரும் கொல்லப்படவில்லை. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிராந்தியம். | ...... | 7 பேர் கொல்லப் பட்டனர்; 30 பேர் காயமடைந்தனர்; சொற்பச்சேதம். |
| **28—8—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்—கிழக்கு இங்கிலாந்து (England). | ...... | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | லெனின்கிராட் (Leningrad). | ...... | விரட்டப்பட்டன. |
| **29—8—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக்கரை. | 1 விமானம். | சொற்பச்சேதம். |
| **30—8—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | ஒரு இடம்.—தென் கிழக்குக்கரை | ...... | சொற்பச்சேதம்; சிலர் கொல்லப் பட்டனர். |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 31—8—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் கிழக்கு, வடகிழக்குக்கரை. | 1 விமானம். | சொற்பச்சேதம்.; சிலர் கொல்லப் பட்டனர். |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | …… | 2 பேர் கொல்லப் பட்டனர். 43 பேர் காயமடைந்தனர். |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிராந்தியம். | …… | ஒருவரும் கொல்லப் படவில்லை; சொற்பச் சேதம். |
| 1—9—41. (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஒரு பிரதேசம்—இங்கிலாந்தி (England)ன் வடகிழக்கும், இன்னும் சில இடங்களும். | 1 விமானம். | கொஞ்சம் பலத்த சேதம். |

---

## ஹிட்லரின் தோல்விகள்; அவர் அஜாத சத்துரு என்பது பொய்க்கதை.

## அவர் போட்ட மூன்று உயிர்நிலையான திட்டங்கள்.

## அதாவது படையெடுப்பு, விமானப்போர், பிரிடனின் பொருளாதார முற்றுகை, இவைகள் பொய்யாயின.

## நேசதேசங்களின் நிலைமையில் மாறுதல்கள்.

**(வைகவுண்ட் ஸாம்யூல் சமீபத்தில் பி. பி. ஸி.-யில் பேசியது)**

கிரீட்டிலிருந்து நம்முடைய படைகள் விரட்டப்பட்டவுடன் ஹிட்லர் போட்ட திட்டம் தவறுமா, தவருதா என்று காமன்ஸ் சபையிலிருக்கும் மெம்பர் ஒருவருடன் நான் விவாதித்துக்கொண்டிருந்தேன். "எப்படியிருந்தாலும் இதுவரை ஹிட்லர் எடுத்த ஒவ்வொரு காரியத்திலும் ஜயமடைந்துவருகிருர் என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது" என்று அவர் சொன்னர். இதைப்போலவே உலகில் அநேக பாகங்களில் உள்ளவர்கள் சந்தேகம் இல்லாமல் அவ்வித அபிப்பிராயம் கொண்டிருக்கிருர்கள். இந்த தேசத்திலும்கூட சில சமயங்களில் அவ்வாறு அபிப்பிராயப்படுகிருர்கள்.

இதைக் கேட்டவுடன் இந்த யுத்தத்தில் ஹிட்லரின் தோல்விகளுக்கு ஒரு ஜாபிதா தயார் செய்தேன். அதில் 10 தோல்விகள் இருப்பதாகக் கண்டேன். அதன் விவரத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். அந்தத் தோல்விகளால் பூராவும் நமக்குத்தான் ஜயம் வந்துவிட்டதென்றுவது அல்லது பாதி அளவு ஜயித்துவிட்டோமென்றுவது நான் சொல்லுவதாக நீங்கள் எண்ணக்கூடாது. அது அப்படியில்லை. யுத்தம் ஆபத்தான நிலையில் இப்பொழுது இருக்கிறது.

ஹிட்லர்தான் ஏற்கனவேயடைந்த தோல்விகளுக்கு வேறு வழிகளில் ஈடுபண்ண பிரயத்தனப்படுகிறார். அல்லது வேறு துறைகளில் அவர் புதிதாக ஜயம்பெற்று தோல்விகளுக்கு ஈடு செய்யக்கூடும். விஷயங்களை லேசாக எடுத்துக்கொள்ளுவதற்காகவாவது, மொத்தத்தில் யுத்தம் நமக்கு அனுகூலமாகத்தான் நடைபெறுகிறதென்று, இங்கும் அமெரிக்காவிலும் இன்னும் இதர தேசங்களிலுமுள்ள சிநேகிதர்கள் தங்கள் முழு பலத்தையும் உடனே உபயோகிக்கவேண்டிய தருணம் வரவில்லையென்று உணர்வதற்கும் ஒரு காரணமாகிவிடுமென்று பயந்து இந்த தோல்வியின் ஜாபிதாவை உங்களுக்குச் சொல்லவில்லை. மேற்சொல்லியபடி எண்ணம் நமக்குத் தோன்றினால், ஆபத்துத்தான்.

ஆனால், ஜர்மானியர்கள் மிகுந்த பலமுடையவர்கள்; நாமும் நம்முடைய தேசத்தினரும் போலாந்து நார்வே, பெல்ஜியம், பிரான்ஸ், யூகோஸ்லாவியா, கிரீஸ், கிரீட், லிபியா முதலிய இடங்களில் இதுவரை அபஜயம் அடைந்து இருக்கிறோம். நாம் என்ன கஷ்டப்பட்டு போர்புரிந்தாலும் வருங்காலத்திலும் இப்படியேதான் இருக்கும் என்ற மாறுபாடான அபிப்பிராயம் நமக்கு உண்டானால் நமது யுத்த முயற்சிகள் தளர்ந்துவிடும். அப்படி நினைப்பது உண்மையாகாது. இது ஒருவகை அபிப்பிராயம். நடந்த சம்பவங்களிலிருந்து நாஸிகளுக்கு தோல்வியே கிடையாது என்ற கொள்கை முற்றிலும் பொய் என்று வெளியாகின்றன.

## முதல் தோல்வி.

ஒரு வருஷத்திற்கு முன் அவர்கள் பிரிடன்பேரில் படையெடுப்பு திட்டம் போட்டதில் அடைந்த தோல்விதான் முதலானது. பிரான்ஸ் முதலெடுப்பில் தோல்வியடைந்தவுடன் பிரிடனை எதிர்க்க பெருத்த தயாரிப்பு நடந்தன. கிரேட் பிரிடனுக்கு எதிரேயுள்ள ஐரோப்பா கண்டத்திலுள்ள எல்லாத் துறைமுகங்களிலும் ஆயிரக்கணக்கான மோட்டார் படகுகளும் இன்னும் இதர படகுகளும் சேகரிக்கப்பட்டன; அளவற்ற சைனியங்கள் படகுகளில் ஏறக் காத்துக்கொண்டிருந்தன. ஏராளமான விமானங்கள் ஒன்று சேர்ந்து பிரிடிஷ் விமானப்படையை அழிக்க சேமிக்கப்பட்டிருந்தன; படையெடுப்பு நடவடிக்கைகள் நேரில் நடத்துவதற்காக கோயரிங் தளகர்த்தர் அங்கு வந்திருப்பதாகப் பிரசித்தப்பட்டிருந்தது; ஜெர்மனியில் எங்குபார்த்தாலும் "இங்கிலாந்தை படையெடுக்கப் போகிறோம்" என்ற சப்தம் முழங்கியது.

இப்பெரிய யுத்தம் துவக்கியவுடனே இங்கிலீஷ் கால்வாயின் ஆதிக்கம் தங்கள் வசம் வந்துவிட்டதாக ஜெர்மன் மேல் அதிகாரி ஒரு சமயத்தில் சொல்லிவிட்டார். அப்பொழுது ஜெர்மனியில் மிகுந்த உத்ஸாகம் ஏற்பட்டது. கூட்

டம் கூட்டமாக ஜனங்கள் படையெடுப்பு ஆரம்ப சமாசாரத்தைக் கேட்க ஆவலுடன் ஒலிபரப்பிகள் முன் சூழ்ந்தனர்.

**படையெடுப்பு நின்றுவிட்டது.**

அந்த படையெடுப்பு ஒன்றுமில்லை. லுப்ட்வாபிக்கும் பிரிடிஷ் விமானப் படைக்கும் நடந்த போரில் இங்கிலீஷ் கால்வாயின் ஆதிபத்தியத்தை லுப்ட்வாபி அடையமுடியவில்லை. இங்கிலீஷ் விமானப்படைதான் அடைந்தது. பிரிடிஷ் விமானப்படையில் விமானங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. இருந்தாலும் அவைகளின் யந்திரங்கள் மிகவும் உயர்வானவை; எல்லாவற்றையும் காட்டிலும் அவ்விமானிகள் அதிகத் திறமை வாய்ந்தவர்கள். உலகச் சரித்திரத்தில் முடிவான யுத்தங்களில் ஒன்று என்று நிரூபிக்கக்கூடியதும், ஜெர்மனி நம்பியிருந்ததுமான ஆகாய விமானச் சண்டையைக் கைவிடும்படி செய்யக்கூடிய பெரிய நஷ்டத்தை ஜெர்மனிக்கு பிரிடிஷ் விமானப்படை உண்டாக்கியது.

**ஹிட்லர்தான் முழுமையும் தோற்கடிக்கப்பட்டார்.**—விரோதிப் படகுகள் அந்தந்த துறைமுகங்களிலேயே நிறுத்தப்பட்டிருந்தன. அவைகளில் நின்ற நூற்றுக்கணக்கான ஜெர்மன் படகுகள் வெடிகளால் தாக்கப்பட்டும், மூழ்கடிக்கவும் பட்டன. நம்முடைய பிரதம மந்திரி எச்சரித்த பிரகாரம் மீண்டும் படையெடுப்பு ஆரம்பிக்கலாம். முன்ஜாக்கிரதையாயிருப்பதில் சிறிதளவாவது தளரவிட்டால் படையெடுப்பு மீண்டும் துவக்கப்படும் என்று நிச்சயமாக எண்ணலாம். ஆனால் நாம் இனி முன்ஜாக்கிரதையில் சிறிதேனும் தளரமாட்டோம்.

யுத்தம் துவங்கி பனிரெண்டு மாதங்களுக்குள் ஏராளமான திறமை வாய்ந்த சைனியமும், லக்ஷக்கணக்கான ஜனங்களடங்கிய உள்நாட்டுப் படையும், அவைகளின் ஒத்தாசைக்காக அநேக டாங்கிகளும், பீரங்கிப்படை, விமானப் படைப் பகுதிகளும் இங்கிலாந்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் ஹிட்லர் சென்ற வருஷத்தில் அடைந்த தோல்வியிலிருந்து நமது படையைச் சேர்க்க சாத்தியமாயிற்று

**இரண்டாவது தோல்வி.**

**விமானச் சண்டை.**

பிறகு அவர் தாக்கும் விதத்தை மாற்றிக்கொண்டார். லண்டனிலும் இன்னும் இதர நகரங்களிலும் விமான எதிர்ப்புகள் துவங்கின. நம்முடைய கப்பல் துறைகளையும், கப்பல் தங்குமிடங்களையும், யுத்த தளவாடங்கள் செய்யும் தொழிற்சாலைகளையும் அழிக்கவும், பிரிடிஷ் மக்களின் மனோபாவத்தை மாற்றவும் ஆகிய இரண்டு நோக்கங்களுடனும் அவர் இந்த யுத்தத்தைத் துவக்கினார். ஆனால் இவ்விரு நோக்கங்களும் நிறைவேறவில்லை.

உண்மையில் சில ராணுவ ஸ்தலங்கள் பழுதுபட்டது வாஸ்தவம்தான். தலைநகரிலும் இன்னும் அநேக நகரங்களிலும் அநேக இடங்கள் பாழாயின; நாற்பத்திராயிரம் பிரிடிஷ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; அநேகர் பலத்த காயம் அடைந்தனர். இருந்தாலும் யுத்த தளவாடங்கள் செய்வது குறைவுபடாமல் அதிகரித்துக்கொண்டே வருகிறது. சேதம்போக மீதியுள்ளவை வரவர அதிகரிக்கின்றன.

**பிரிடிஷ் மக்களின் மனோபாவம் கொஞ்சமும் மாறவில்லை, சிறிதும் பழுதாகவில்லை.** இனி என்னென்ன இடையூறுகள் நேரிட்டாலும் ஹிட்லரை அந்தப் பக்கம், இந்தப் பக்கம் அசையவிடாமல் திணரவைத்து சமாதானத்திற்கு வந்துவிடும் சமயத்திற்கு மட்டுமல்லாமல், கடைசிவரையில் யுத்தம் செய்து ஹிட்லரை ஒழித்து பூரா ஜயமும் அடையும்வரை பிரிடிஷ் மக்கள் யுத்தம் புரிய ஒரே எண்ணத்துடன் தீர்மானமாக இருக்கிறார்கள். அவர்களுடைய மனோதிடம் ஹிட்லரால் அசைபடாது, அசைக்கவும் முடியாது. இதுதான் ஹிட்லரின் இரண்டாவது மகத்தான தோல்வி.

### மூன்றும் தோல்வி.
### அட்லாண்டிக்கில் யுத்தம்.

மூன்றுவதாக ஹிட்லர் கடற்போரில் தோல்வியடைந்தார். ஆனால் ஜெர்மன் நிலப்படைக்கு அதிதீவிரமாக வெற்றிக்குமேல் வெற்றி தொடர்ந்து வந்தன; ஆனால் அதன் கப்பற்படைக்குத் தொடர்ந்தார்போல் பெருத்த தோல்விகள் ஏற்பட்டன. ஹிட்லருக்குச் சென்றவிடமெல்லாம் வெற்றி என்று ஜனங்கள் சொல்லிவரும் பொழுதே சமுத்திர யுத்தத்தில் முதல் முதலில் கிராப்ஸ்பீ என்ற கப்பலும் பிற்பட்டு பிஸ்மார்க் என்ற கப்பலும் அழிக்கப்பட்டு, ஸ்திரமாயுள்ளது என்று பேர்போன ஷார்ன் ஹார்ஸ்டும் அடுத்தபடியாக நீஸ்நௌ துறைமுகத்திலேயே அடைக்கப்பட்டன.

பிரிடனைப் பொருளாதார முற்றுகை போட ஹிட்லர் பிரயத்தனப் பட்டதில் அவர் அட்லாண்டிக்கில் சண்டையில் தோல்வியடைந்து விட்டார் என்று இவ்வளவு சீக்கிரத்தில் சொல்ல முடியாததுதான். ஆனால் அவர் ஜயிக்கவில்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இச்சமுத்திரப் போரில் நமக்கு அநேக கப்பல்களில் வந்த பொருள்கள் மூழ்கடிக்கப்பட்டன. அதனால் இந்த தேசத்தில் அநேக பொருள்கள் குறைந்துவிட்டன. தேவையுள்ள யுத்த தளவாடங்களும் இன்னும் மற்ற சாமான்களும் நம் துறைமுகங்களில் வந்திறங்குகின்றன. சமீபத்தில் மூழ்கியடிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை பிரசுரமானதில் நமக்கு கவலையை உண்டாக்கினாலும் அதைத் தடுக்க நாம் எடுத்துக்கொள்ளும் திட்டங்களின் திறமை வரவர அதிகரித்து வருவதினால், கடல் போக்குவரத்தை நிறுத்தி நம்மைக் கீழ்படியச் செய்ய முடியாது.

படையெடுப்பு, விமானச் சண்டையில் அழிவு, கடல் ஆதிக்கம் இவைகள்தான் உயிர் நிலையாய் உள்ளவை. இவைகளைக்கொண்டு யுத்தத்தில் வெற்றி, தோல்வி என்பதைத் தீர்மானிக்கலாம். இம்மூன்றிலும் பிரதானமாக ஹிட்லர் தோற்று விட்டார்.

### ஹிட்லரின் தோல்விகள்—4 முதல் 10 வரை.
### ஸ்பெயினின் நடுநிலைமை.

பாக்கி ஏழு தோல்விகளும் நமக்கு மிகவும் முக்கியமான விஷயங்களைக் குறித்தபோதிலும், உயிர் நிலையைத் தாக்கக்கூடியதல்ல. பிரான்ஸ் அடிமைப்படுத்தப்பட்ட பிறகு ஸ்பெயினையும் தட்டிக்கொடுத்து சண்டைக்கிழுத்துவிடப்படுமென்று நம்மளில் அநேகருக்குத் தோன்றிற்று. பெரிய ஜெர்மன் சைனியங்கள் அநேக பீரங்கிகளுடன் ஸ்பெயின் ரஸ்தாக்களிலும், இருப்புப்பாதை மூலமும் ஜிப்ரால்டரை முற்றுகைபோடப் போய்க்

கொண்டிருந்தன. ஜிப்ரால்டர் குன்று முற்றுகைக்குத் தாங்கினாலும் அதன் துறைமுகத்தை நமது கப்பற்படை உபயோகப்படுத்த விடாமல் எதிரி செய்திருக்கலாம்.

**ஆனால் இது சம்பவிக்கவில்லை.**—இனி மேல் நடந்தாலும் நடக்கும். ஆனால் சென்ற பனிரெண்டு மாதங்களாக ஸ்பெயின் நடுநிலைமையாக இருப்பது ஹிட்லரின் விருப்பத்தின் பேரில்தான் என்று ஒருவரும் நினைக்க முடியாது. இது நாலாவது தோல்வி.

**மேலும் வட ஆபிரிக்காவில்.**—ஐந்தாவதாக ஸிரெனைகாவை நாம் ஜயித்த பொழுது அதைத் தடுக்க ஜெர்மனி குறுக்கிட்டு அதன் மோட்டார் படைகளை எகிப்தின் எல்லைப்புறத்தில் கொண்டு வந்தபொழுது பிரான்ஸிலும் மற்ற இடங்களிலும் படையெடுத்தது போல திடீரென்று தாக்கப்படுமென்று கலவரமடைந்திருந்தோம். நமது சேனையின் பெரும்பாகம் கிரீஸ் தேசத்தில் போராடி வந்த சமயம் அவர்கள் அலெக்ஸாண்டிரியாவரையிலும் ஆக்கிரமித்திருக்கக்கூடும். மத்தியதரைக் கடலில் நமது கப்பற்படையின் முக்கியமான தளத்தையும் தாக்கியிருக்கக் கூடும்.

ஹிட்லர் அவ்வாறு செய்திருந்தால் இதைக்காட்டிலும் வேறொன்றும் அவருக்குத் திருப்தியளித்திருக்காது. ஆனால் அதையும் ஹிட்லருக்குச் செய்ய முடியவில்லை. ஜெர்மானியர்களும், இதாலியர்களும் சேர்ந்து டோப்ருக்கிலுள்ள நம்முடைய சிறிய தைரியமுள்ள படையை இது வரையிலும் கூட அசைக்க முடியவில்லை.

### அதற்கும் கிழக்கே.

அதற்கும் கிழக்கே இராக்கில் நடந்த சம்பவத்தை எடுத்துக்கொள்வோம். ரஷீத் ஆலி உள்நாட்டுக் குழப்பத்தை உண்டாக்கியபொழுதும், ஜெர்மன் ஒற்றர்கள் ஸிரியாவில் வந்து நிறைந்த பொழுதும் பத்திரிகை நிருபர்களில் சிலர் ஜெர்மானியர்கள் தங்கள் ஆதிக்கத்தைப் பரவச் செய்வதிலும், கிருத்திரமம் செய்வதிலும் அவர்கள் திறமை வாய்ந்தவர்கள் என்பதற்கு இது ஒரு உதாரணமென்று எழுதினார்கள்.

ஸிரெனைகாவில் ஜெர்மானியர்களுக்கு ஏற்பட்ட ஜயமும், கிரீஸை அவர்கள் தாக்கியதில் ஏககாலத்தில் உண்டான வெற்றியும் ஹிட்லரின் பழுதில்லாத திட்டம் போடும் திறமையை நிரூபித்ததாகச் சொல்லப்பட்டது.

இராக் பூராவும் ஸிரியா பூராவும் பிரிடிஷ் படைகளின் ஆதிக்கத்தில் இருப்பதும், ஹிட்லரால் ஏமாற்றமடைந்தவர்கள், ஆசியா பூராவிலும் ஒளிந்துகொண்டிருப்பதும், அவர் திட்டத்தை முற்றிலும் மறந்துவிடும்படி நம்மைச் செய்துவிட்டது. இது அவருடைய ஆறாவது தோல்வி.

### ருஷ்யாவுடன் சண்டை.

ஹிட்லர் அவருடைய மற்றொரு சிநேகிதரான இதாலியை பாதுகாத்து அல்பேனியா, ஸிரெனைகா, இவற்றை ஜயித்துக்கொடுத்தும், கிரீஸ் தேசத்தில் வியாபிக்கும்படி செய்ததும் நமக்கு ஞாபகத்தில் இருக்கிறது. ஆனால் இதாலிய சாம்ராஜ்ஜியத்தின் மற்ற பாகத்தில் அவர் ஒன்றும் செய்யமுடியவில்லை. ஸோமாலிலாந்து, எரிட்ரியா, அபிஸீனியா இந்த இடங்களிலுள்ள இதாலியப் படைகளுக்கு ஆகாயம், நிலம், கடல் இந்த மார்க்கமாக யாதொரு உதவியும் செய்யவில்லை. இத்தகைய

பெரிய பிரதேசங்கள் பிரிடன் குடியேற்ற நாடுகள் இந்தியா, இவைகளின் திறமை வாய்ந்த சிறிய படைகளிடம் தோல்வியடையாமல் அவரால் தடுக்க முடியவில்லை. இதுதான் அவருடைய ஏழாவது தோல்வி.

ருஷ்யாவை சாந்தமாக சண்டை செய்யாதிருக்கும்படி தாஜாப்படுத்தியும் மிரட்டியும் அவர் முயன்று வந்தது அவருடைய அடுத்த தோல்வியைக் குறிக்கிறது. ரிப்பன்டிராப் உதவியால் ஹிட்லர் சண்டை ஆரம்பிக்க வழிசெய்து கொண்டார். அது ராஜதந்திரங்களில் மகத்தான வெற்றியென்று அப்பொழுது ஜெர்மானியர்கள் சொல்லிக்கொண்டார்கள். ஆனல் இப்பொழுது சென்ற சில வாரங்களில் நடந்த சம்பவங்களிலிருந்து அவருடைய தோல்வி எவ்வளவு பெரிது என்பதைக் காட்டியிருக்கிறது. இதுதான் எட்டாவது தோல்வி.

## அமெரிக்காவின் ஒற்றுமை.

அடுத்தாற்போல ஜப்பானுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப்பற்றி கவனிப்போம். அது யுனைடெட் ஸ்டேட்ஸை மிரட்டுவதற்காகவும், பிரிடனுக்கு பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு உதவியளிப்பதைத் தடுப்பதற்காகவும் எத்தனிக்கப் பட்டது. இந்த் திட்டம் தவறி விட்டதென்று எல்லோருக்கும் வெட்ட வெளிச்சமாகத் தெரியும். இதுதான் அவருடைய ஒன்பதாவது தோல்வி. யுனைடெட் ஸ்டேட்ஸ் கொஞ்சம்கூட பயப்படவில்லை. ஜெர்மன் பிரசாரகர்கள் தென் அமெரிக்கா பிரஜாதி பத்தியமுள்ள தேசங்களில் வட அமெரிக்காவுடன் சேர்ந்து ஒத்துமையாக நடவடிக்கை நடத்தாமல் நிறுத்துவதற்காக தூண்ட எடுத்த பெரிய பிரயத்தனங்கள் கடைசியானது முக்கியமானது. அதுவும் பலிக்கவில்லை.

அமெரிக்காவிலுள்ள 21 பிரஜாதி பத்தியமுள்ள தேசங்கள் சேர்ந்து ஒன்றுகவே உலக அமைதியைக் கெடுக்கிறவர்களுக்கு எதிராக நிற்கின்றன. அவர்களுடைய குறைவுபடாத சகாயத்தினுல் பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் பெரிதாகவும், அதிகரித்துக்கொண்டு இருக்கிறதுமான விலைமதிப்பில்லாத உதவியை அனுப்பிக்கொண்டிருக்கிறுர். இதுதான் பத்தாவது தோல்வி.

## நாம் தனிமையில் சண்டையிடவில்லை.

இந்தத் தோல்விகள் எல்லாம் நேச தேசத்தார்களுக்கு நிச்சயமாக ஜயம் கிடைக்கும் மார்க்கத்திலிருக்கிறதென்று உலகத்தார்களுக்கு தெளிவாக்குகின்றன.

ஒரு வருஷத்திற்கு முன் கிரேட் பிரிடன் அதன் ஆளுகைக்குட்பட்ட தேசத்தார்களின் சகாயத்தை மட்டும் கொண்டு, இராணுவ முஸ்தீப்புடன் இருக்கும் பூரா உலகத்தாருக்கு எதிராக நம்பிக்கையற்று போராடி வருகிறதாக அநேகர்களுக்குத் தோன்றிற்று. இப்பொழுது அப்படியில்லை. பிரிடிஷ் சாம்ராஜ்ஜியம் ருஷ்யாவுடன் நேசம் பூண்டும், தூரக் கிழக்கில் சைனவுடன் கூட்டுறவு பூண்டும், வடக்கு தெற்கு அமெரிக்காவின் சகாயமும் அனுதாபமும் அடைந்து இந்த உலகத்தில் வசிக்கும் 2,00,00,00,000 ஜனங்களின் மூன்றில் இரண்டு பங்கு உள்ளவர்களின் பிரஸித்தியடைந்த பிரீதியை சம்பாதித்துக்கொண்டு சண்டையிட்டுவருகிறது.

இதை விஞ ஐரோப்பாவில் ஜயிக்கப் பட்ட தேசங்களிலுள்ள மற்றுமுள்ள கோடிக்கணக்கான ஜனங்களும் விடு

தலைக்குக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குள்ள துக்கத்தை பிரிடனையும் நேசதேசத்தார்களையும் அவர்களைக் கைதூக்கி விடும்படி வேண்டிக்கொள்ளுகிறார்கள். அவர்களை மீட்க பிரிடனைத்தான் எதிர்பார்க்கிறார்கள். இப்பொழுது வரப்போகும் ஜயத்தி லுள்ள லாபம் அவர்களுக்கும் மற்றுமுள்ள உலகத்தாருக்கும் பங்கிடப்படும்.

---

# வருஷாந்திரப் பகுதி—1941-ம் வருஷம்.

## அனுகூல பிரதிகூலங்கள்—முதல் வாரம்

## "புயலை அடக்கி ஆளுகிறது".

### I-அச்சு நாடுகள்.

**1940.**

**ஹிட்லரின் யுத்தப் பிரதேசம்.**

(a) ஜயம்.

1. வெகு சீக்கிரமாக ஹிட்லர் போலந்தை ஜயித்தார். ஆனால் நேயக் கக்ஷிக்கு இதனால் ஏற்படும் அபாயத்தைத் தெரிந்துகொள்ளவில்லை. அவர்கள் கலவரப்படாமல் இருந்ததைச் சாதகமாகக் கொண்டு ஹிட்லர் திடீரென்று அவர்களையும் தாக்கினார். அதன் முடிவு நார்வே பள்ளத்தாக்குப் பிரதேசங்கள், பிரான்ஸ் இவைகள் ஜயிக்கப்பட்டன— பிரிடனும் பெரிய அபாயத்திலிருந்தது.

2. இதாலி கொள்ளைப் பொருளில் பங்கிட வருகிறது. பிரிடிஷ்காரர்கள் பிரிடிஷ் ஸோமாலிலாந்தை காலி செய்து வெளியேறுகிறார்கள்.

**1941.**

**கடற்படை ஆதிக்கத்தின் முடிவு.**

(a) விபத்து.

1. பிரிடனுக்கு இருந்த பெரிய அபாயம் நீங்கி மாறுதல் ஏற்பட்டு பிரிடிஷ் படையெடுப்பினால் ஜெர்மனிக்கும், ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்களுக்கும் அபாயம் நேரிட்டிருக்கிறது. இப்பொழுது ஜெர்மனி இருபக்கங்களிலும் தாக்கப்படுகிறது. ஆக்கிரமிக்கப்பட்ட தேசங்கள் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டன. அவைகள் பொருளாதாரயின்மையாலும், ராணுவப் பாதுகாப்பு வேண்டியிருப்பதாலும் ஜெர்மனிக்கு நிர்பந்தமாகவும், ஓயாக் கவலைக்கிடமாகவும் இருக்கிறது. நேசதேசங்களிலெல்லாம் அஜாக்கிரதை நீங்கி மனஉறுதி ஏற்பட்டிருக்கிறது.

2. இதாலி ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு தேசமாகிவிட்டது. ஆபிரிக்காவில் அதன் சாம்ராஜ்ஜியத்தின் பெரும் பாகத்தை இழந்துவிட்டது. அதன் சைனியத்தின் பெரும் பாகத்தையும், ஆகாய விமானப்படையில் பெரும் பாகத்தையும் மத்தியதரைக்கடலில் அதன் கப்பற்படையில் பெரும் பாகத்தையும் இழந்துவிட்டது. அல்பேனியாவில் தைரியமுள்ள கிரேக்கர்களுடன்

சண்டையிட்டதில் அதன் முழு கௌரவத்தையும் இழந்துவிட்டது. முஸோலினி அதிகார ஆசை கொண்டதில் இதாலி உலகத்தாரின் இகழ்ச்சியை அடைந்திருக்கிறது. வெகு வருஷங்களாக முன்னேற்றமடைந்திருப்பதின் பயன்களையும் இழந்துவிட்டது. மத்தியதரைக்கடலிலும், மத்தியக்கிழக்கிலும், பிரிடிஷ் கப்பற்படை ஆதிக்கம் அதிகரித்து, இப்பொழுது இதாலி ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது.

3. ருஷ்யா நடுநிலைமையாக இருந்தது, ஆனால் ஜெர்மனி பக்கம் அனுதாபம் கொண்டு மற்றுமுள்ள நடுநிலைமை நாடுகளும் வலுத்தவன் கக்ஷியில் சேரும் ராஜதந்திரத்தை ஒத்து, ஜெர்மனியின் சார்பாக இருந்தன.

3. இப்பொழுது பிரிடிஷ் கப்பற்படையின் ஆதிக்கத்தால் சூழப்பட்டு, ஜெர்மனி தன்னுடைய பெரிய ராணுவ யந்திரப்படைகளை பெரியதாயும் நன்றாகப் பயிற்சியடைந்திருக்கும் ருஷ்யப்படைகளின் பேரில் தாக்கிவருகிறது. பிரிடிஷாரின் பொருளாதார முற்றுகையில் ருஷ்யா பலஹீனப்பட்டிருந்தது. அதே ருஷ்யாவில் இப்பொழுது ஜெர்மானியர் அழிக்கப்படுகிறார்கள். ஹிட்லருடன், அவருடைய நாஸிக் கக்ஷியாரும், ஜெர்மானியர்களில் பொறுக்கி எடுத்தவர்களும், அழிந்துகொண்டு வருகிறார்கள். அந்த தேசத்தார்கள் பூராவும் சண்டைபோடுவதற்குக் காரணமான, புத்தியில்லாத அதிகார ஆசையும், அவருடன் அழிந்துவிடும்.

நடுநிலை நாடுகள் முடிவில் பிரிடிஷாருக்கு ஜயம் ஏற்படுமென்ற நம்பிக்கையைத் திரும்பப் பெற்றிருக்கிறார்கள். கிரீஸும், யூகோஸ்லாவியாவும் சண்டையிட்டன. மறுபடியும் சண்டைக்குக் கிளம்பும். துருக்கி அடிக்கடி மிரட்டப்பட்டாலும் பிரிடனுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி இருந்துவருகிறது. அமெரிக்காவிலுள்ள குடியரசு நாடுகள் நாஸிகளின் மிரட்டல்களுக்குப் பதிலளித்திருக்கிறார்கள்.

4. ருமேனியா அச்சு நாடுகள் திரப்பில் சேர்ந்தது. அதன் எண்ணெயின் பெரும்பாகத்தை ஜெர்மனிக்குக் கொடுத்திருக்கிறது. பால்கன்

4. ருமேனியா, அதன் பிரதேசத்தில் மூன்றில் ஒருபாகம் நஷ்டமடைந்தும், ஜெர்மனிக்கு உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்வதினால் அதன் ஜனங்களுக்கு ஆகாரம் குறைந்தும், இருந்தாலும் நாஸி யுத்தத்தில் சேர்ந்திருக்கிறது.

பிரதேசத்திலுள்ள நடுநிலைமை நாடுகளிலிருந்து ஜெர்மனி சாமான்கள் பெற்றுக் கொள்ளுகிறது.

அதன் எண்ணெய் தளங்களின்பேரில் ருஷ்யர்கள் வெடிகுண்டு போடுகிறார்கள். அதன் ஐவேஜியும் போய் விட்டது.

பால்கன் பிரதேசத்தில் ஜெர்மனி தாக்குவதினாலும், கிரீஸும், யூகோஸ்லாவியாவும் தொடர்ந்து எதிர்த்து வந்தமையாலும், ஜெர்மனிக்கு பால்கன் பிரதேசத்திலிருந்து வந்த பொருள்கள் எல்லாம் நின்றுவிட்டன. பால்கன் தேசத்தினர் வயல்களெல்லாம் போர்க்களமாகிவிட்டன.

5. ஜெர்மனி, பிரெஞ்சு துறைமுகங்களை ஸ்வாதீனப் படுத்திக்கொண்டதிலிருந்து பிரிட்டனை முற்றுகை போடுவதாக விளம்பரம் செய்தது.

5. அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் சண்டை நடக்கிறது. இப்பொழுது பிரிட்டனுக்கு ஜயம் ஏற்படுகிறது. பிரிட்டன் கடல் மார்க்கங்கள் ஒருபொழுதும் மூடப்படவில்லை. அட்லாண்டிக்கில் ஜெர்மனி தன் 'யூ' படகுகள் அனைத்தையும், நேர்த்தியான யுத்தக் கப்பல்களையும் இழந்துவிட்டது. பாக்கியிருந்த யுத்தக் கப்பல்களும் துறைமுகங்களில் ஒளிந்து கொள்ளும்படி துரத்தியடிக்கப்பட்டிருக்கின்றன.

6. பிளீட்ஸ் க்ரீக்கின் தந்திரங்கள் உலகத்தாரை அதிசயிக்கும்படி செய்தன. ஜெர்மன் படை ஜயிக்க முடியாததாய் காணப்படுகிறது.

6. பிளீட்ஸ் க்ரீக்குக்கு ருஷ்யாவில் சமமான எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அங்குதான் முதல் தடவை ஜெர்மனி தங்கள் அதிகமாக எண்ணிக்கையாலும், பயிற்சியினாலும் சாதகமடையமுடியவில்லை. இதில்கூட, ஜெர்மன் சிப்பாய் தோல்வியடைய முடியாதவன் என்று கோயபல்ஸ் சொல்லிவந்த மர்மம் பொய்ப் பிரசாரம் என்று வெளிப்பட்டிருக்கிறது.

7. எல்லாவிதமான யுத்த தளவாடங்கள் செய்வதில் ஜெர்மனி மிகவும் முன்னேற்றமடைந்திருந்தது.

7. ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்களின் யுத்த தளவாடங்கள் செய்யும் தொழிற்சாலைகள் உபயோகப்படுத்தப்பட்டு அதன் உச்சஸ்தானத்திற்கு வந்துவிட்டது. ஆனால் பிரிடிஷார்கள் யுத்தப் பொருள்கள் செய்வதில் அதிகரித்துக்கொண்டேவருகிறார்கள். அவர்களுக்கு சாம்ராஜ்ஜியத்தினுடைய தேசங்களிலிருந்தும், யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்தும், வெள்ளக் கணக்காக சாமான்கள் வந்திறங்கிக்கொண்டிருக்கின்றன. ருஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் நடக்கும் சண்டையில் நாஸி கையிருப்பில் உள்ளவைகள் துரிதமாகக் குறைந்துகொண்டே போகின்றன.

| | |
|---|---|
| 8. ஹிட்லரின் ஐந்தாம் படைத் தந்திரங்கள் வெற்றி கரமாய் இருந்தன. | 8. ஐந்தாம்படை என்ற ஆயுதம் இப்பொழுது மழுங்கிவிட்டது. யூக்ரேன் பிரதேசத்தில் இந்த ஆயுதம் பிரயோஜனப்படவில்லை நேய தேசங்கள் ஜெர்மனியை மிரட்டுவது அதிகரித்துக்கொண்டிருப்பதாலும், ஆக்கிரமிக்கப்பட்ட தேசங்களுக்கு, நேய தேசத்தினர் ஜயமடைவார்கள் என்ற உறுதி ஏற்படுவதாலும், இந்த ஐந்தாம்படை அனுகூலத்திற்குப் பதிலாகப் பிரதிகூலத்தைச்செய்கிறது. |
| (b) எதிர் காலம். | (b) இதுவரை நடந்தது. |
| 1. மாரி காலத்திற்கு முன்பே வெற்றி கிடைக்கும் என்று ஜெர்மானியர்கள் நம்பியிருக்கிறார்கள். | 1. ஜெர்மானியர்கள் ஜயத்தை எதிர் பார்க்கிறார்கள். "மாரி காலத்துக்கு முன் சமாதானம் ஏற்படுமென்று" திண்ணமாகயிருக்கிறார்கள். |
| 2. அது ஏக்கத்தினால் உண்டாகும் நம்பிக்கை. எப்படி சமாதானம் ஏற்படும் என்று ஒரு ஜெர்மானியர்கூட சொல்ல முடியவில்லை. | 2. சமுத்திரத்தில் குறுகிய இடங்களில் மாத்திரம் ஆகாய விமானப்படை, கடல் ஆதிக்கத்தை மிதப்படுத்தியதே தவிர அதை நிறுத்த முடியவில்லை. அகண்டமான சமுத்திரங்களில் கடல் ஆதிக்கம், அதன் ஆதிபத்தியத்தை விட்டு விடாமல் வைத்திருக்கிறது. |
| ஆகாய விமானப்படை பிரிடிஷ் பாதுகாப்பான கடற்படையை துர்ப்பலப்படுத்தியது போல் தோன்றியது. | |
| 3. ஜெர்மன் வல்லரசு பலமும், ஜெர்மன் பான்ஸர் சைனியமும் தோல்வியடையாதென்று ஜெர்மானியர் நினைக்கிறார்கள். | 3. ஜெர்மன் பிரசாரத்தினால் வளர்ந்து வந்த ருஷ்யா வரவர அந்தப் பொய் பிரசாரத்தில் அதிக நம்பிக்கை வைக்கவில்லை. |
| ஆனால். | இப்போழுது. |
| 4. பிரிடன் ஐரோப்பா கண்டத்தில் பொருளாதார முற்றுகையை நிலைநிறுத்தி வருகிறது. | 4. முற்றுகை தொடர்ந்து வருவதுடன் பலப்பட்டு வருகிறது. மேல் மேல் பிரிடிஷ் கப்பற்படைக்கு இன்னும் அநேக யுத்தக் கப்பல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சமுத்திரக்கரைப் பாதுகாப்புப்படைக்கு இன்னும் விமானங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஹிட்லர் குறைந்து வரும் பொருள்களுக்கு ஈடு செய்ய புதிய பிர |

தேசங்களில் கொள்ளையடிக்கவேண்டி ருஷ்யாவைத் தாக்கினார். சமுத்திரத்திற்கு அப்பால் உள்ள இடங்களிலிருந்து பொருள்கள் கிடைக்காததினால்தான் இம்மாதிரி ஆரம்பித்தார்.

5. பிரிடனுடன் சமாதானம்செய்துகொள்ள ஹிட்லர் கோரினது நிராகரிக்கப்பட்டது.

5. பிரிடனின் சமாதான ஏற்பாடுகளுக்கு முடிவான பதில் ஜுன் மாதம் 22-ம் தேதி பிரதம மந்திரி சர்ச்சில் கூறியிருக்கிறார். “நாம் ஒரு பொழுதும் சமாதானப் பேச்சு பேசப் போவதில்லை. ஹிட்லருடனாவது அவரைச் சேர்ந்த கொள்ளைக்கூட்டத்தினர் யாரிடமும் பேச்சு வார்த்தை கிடையாது”, என்றார்.

6. பிரிடன் பேரில் படையெடுக்க லுப்ட்வாப் வழி ஏற்படுத்த முடியவில்லை. பிரிடனிலும் துரோகிகள் கிடையாது.

6. இராக்காலங்களில் வரையரும்பில்லாமல் வெடிகுண்டுகளைப் போட்டதை விணா, பிரிடனைத் தாக்கியதில் லுப்ட்வாபிக்கு ஜயம் ஏற்படவில்லை. இப்பொழுது லுப்ட்வாப் படையெடுத்தது போக அது தன்னைக் காத்துக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது. ஆகாய யுத்தம் பிரிடனை விட்டு வடமேற்கு பிரான்ஸிலும் ஜெர்மனிக்கு இடையிலும் நடக்கிறது. பிரிடனில் ஐந்தாம் படை வேலை செய்யமுடியாது.

7. படையெடுப்பு திட்டங்கள் ஸெப்டம்பர் மாதம் 16-ம் தேதிவரை ஒத்திப்போடப்பட்டுவிட்டது.

7. படையெடுப்புத் திட்டங்கள் ஒரு பொழுதும் பயன்படவில்லை. இனியும் அபாயம் இருக்கலாம். ஆனால் இப்பொழுது ஜெர்மனி ஆக்கிரமித்த தேசங்களை பிரிடன் படையெடுக்கும் என்ற பயம் வந்துவிட்டது.

8. இதாலியினால் ஏமாற்றமடையப்பட்டது. பிரிடிஷ் கப்பற்படைதான் மத்திய தரைக்கடலை ஸ்வாதீனப்படுத்தி வருகிறது. எகிப்தில் பிரிடிஷ் பலம் குன்றாமல் இருந்து வருகிறது.

8. சென்ற மஹா யுத்தத்தில் நேச தேசங்களுக்கு இதாலி எவ்வாறு இழுக்காக இருந்ததோ அம்மாதிரி இப்பொழுது ஜெர்மனிக்கும் வீண் பாரமாகயிருக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்ஜியப் படைகள் இதாலியன் ஸோமாலிலாந்து, அபிஸீனியா, எரிட்ரியா, ஸிரியா, இந்த தேசங்களில் ஆக்கிரமித்திருக்கின்றன.

(c) பொது நிலைமை.

பொதுவாக ஜெர்மனி குறுகிய கால சண்டைக்கே திட்டம் போட்டிருந்தது. பிரிடனைத் தவிர மற்ற இடங்க

(c) பொது நிலைமை.

ஜெர்மன் குறுகிய கால திட்டங்கள் தவறிப் போய்விட்டன. தன் சைனியத்தைப் பலப்படுத்திக்கொண்டிருக்கும் பொழுதே பிரிடன் ஜெர்மனியை மிஞ்ச விடாமல் தடுத்துவந்தது.

ளில் அதன் திட்டங்கள் பயன் பெற்றன. இருந்த போதிலும் அச்சு நாடுகளுக்கு எல்லா சாதனங்களுமிருக்கின்றன. எண்ணிக்கை பலத்திலும், யந்திரங்களாலும் பிரிடனைத் தோற்கடிக்கக் கூடியதாக இருந்தது.

மத்திய கிழக்குப் பிரதேசத்திலும் மத்தியதரைக் கடலிலும், இதாலி தோற்றுப்போய்விட்டது. ஜெர்மானியர்கள்கூட ஸூயஸ் கால்வாயைத் தாக்கியதில் தோற்றுவிட்டார்கள். இப்பொழுது அவர்களின் சைனியங்கள் ருஷ்யப்போர் முனையில் திணறுகின்றன. எல்லாவற்றைக் காட்டிலும் அவர்கள் பீதியடைவது பிரிடிஷ் பொருளாதார முற்றுகையும், இரு பார்சங்களிலும் பெரிய சண்டையும்தான்.

## II.—பிரிடன் (Britain).

(a) பிரிடன் மாத்திரம் :—

1. ஐரோப்பாவில் நேச தேசம் ஒன்றுமில்லை. இங்கிலீஷ் கால்வாயிலுள்ள துறைமுகங்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன.

2. பி. இ. எப். என்ற பிரிடிஷ் சைனியம திரும்பியது. ஆனால் அது தன் ஆயுதங்களை துலைக்க நேரிட்டது. இப்பொழுதுதான் அபாயத்திலிருப்பதாக தேசத்தார்களுக்குத் தெரியவந்தது. அப்பொழுதும் ஜனங்களில் கால் பங்குதான் ஆயுதபாணியானார்கள்.

3. ஐரோப்பா கண்டம் பொருளாதார முற்றுகை போடப்பட்டது. ஆனால் கப்பற்படை அபாயகரமான நிலையில் குறைவாக இருந்தது. அச்சு நாடுகள் பிரிடனைப்

(a) ஒற்றுமையினால் பலமும் உண்டு.

1. நேச தேசத்தார்களின் சேர்க்கை ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்கள், ஹாலந்து, பெல்ஜியம், நார்வே, ஸெகோஸ்லாவோகியா, போலந்து, கிரீஸ், யூகோஸ்லாவியா, ருஷ்யா, சீனா இப்பொழுது எல்லாம் ஒன்றுசேர்ந்து ஸ்வதந்திரத்திற்காக யுத்தம் செய்கின்றன. இங்கிலீஷ் கால்வாயிலுள்ள துறைமுகங்களில் ஆக்கிரமித்ததினால் அட்லாண்டிக் சமுத்திரத்தில் சண்டை உண்டாகி இப்பொழுது ஜெர்மனி அவைகளைத் தோற்றுவருகிறது.

2. பிரிடன் சமாளித்துவிட்டது. இன்னும் அபாயம் இருக்கிறது. ஆனால் சீக்கிரம் பிரிடன் பூராவும் ஆயுதபாணியாய்விடும். 1940-ல் அபாயம் மிக்க பலமாய் இருந்தது. 1941-ல் பிரிடன், தானும் சமாளித்துக்கொண்டு மற்ற இடங்களில் நடக்கும் போர்முனைகளுக்குப் படைகள் அனுப்பக்கூடிய நிலைமையில் இருக்கிறது.

3. ஐரோப்பா கண்டத்தின் பொருளாதார முற்றுகை இன்னும் நிலைநிறுத்தப்பட்டுவருகிறது. முந்தியைக்காட்டிலும் பலமாக யிருக்கிறது. அதன் பயன்கள் ஜெர்மனியில் நாளுக்குநாள் வெளிப்படையாகத் தெரிந்துவருகின்றன. அச்சு நாடுகள் ஒருபொழுதும் பிரிடனைப் பொருளாதார

பொருளாதார முற்றுகை போட்டிருந்தன.

முற்றுகை போடவில்லை. பிரிடனுக்கு வரும் சாமான்களில் ஒரு பாகத்தை அவை கடலில் மூழ்கடித்தன. பிரிடிஷ் தேசத்தார் சண்டையிடும் திறமை நாளுக்குநாள் ஓங்கிவருகிறது.

4. பிரிடன் எந்த சமயத்திலும் படையெடுக்கப் படலாம். ஆனால் பிரிடிஷ் விமானப்படை எதிரிகளின் படகுகளை ஒன்றுசேர விடாமல் தாக்கிவந்தது.

4. படையெடுப்பு உண்மையில் நடைபெறவில்லை. ஏனென்றால் பிரிடிஷ் விமானப்படை இடைவிடாது காத்துவந்ததினால் எதிரி செய்த பிரயத்தனங்களைப் பூர்த்திசெய்ய முடியவில்லை.

5. பிரிடிஷ் விமானப்படை மனிதர்களின் தன்மையிலும், யந்திரங்களிலும் லுப்ட்வாபைக் காட்டிலும் மேன்பட்டவை என்று ஸ்தாபித்தது. ஆனால் லுப்ட்வாபில் மனிதர்களும் ஜாஸ்தி, விமானங்களும் ரொம்ப இருந்தன.

5. பிரிடிஷ் விமானப்படையின் மேன்மை நிலைநிறுத்தப்பட்டு வருகிறது. எண்ணிக்கையில் இருந்த வித்தியாசமும் சீக்கிரத்தில் குறைக்கப் பட்டுவருகிறது. இங்கிலாந்தில் லுப்ட்வாப் போட்டுவந்த வெடிகுண்டுகளைக் காட்டிலும் அதிகமாகவே ஜெர்மனியில் போடப்பட்டு வருகிறது. உண்மையில் பிரிடிஷ் விமானப்படையின் கை மேலாகிவிட்டது.

6. அமெரிக்கா, பிரிடனுக்கு உதவி செய்ய இஷ்டம் தான். ஆனால் யுத்தப்பொருள்கள் உற்பத்தி செய்துகொடுக்க ஆயத்தமாயில்லை.

6. சண்டையில் சேருபவைகள் தவிர மற்ற எல்லா விதத்திலும் அமெரிக்கா பிரிடனுக்கு ஒத்தாசை செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. பிரஸிடெண்டு ரூஸ்வெல்டும் மற்ற தலைவர்களும் பிரிடிஷ் ஜயம் நிச்சயமென்பதைக் கூறியிருக்கிறார்கள். பிரிடிஷுக்குக் கிடைத்த உதவியின் விவரங்களாவன :—

50 நாசகாரிகள், பிரஸிடெண்டு ரூஸ்வெல்டின் தேருதல்; அட்லாண்டிக்கில் பாரா; ஐஸ்லாந்துக்குப் படைகள் அனுப்பியது. பிரிடனுக்கு அமெரிக்கா பொருள்கள் அனுப்பி உதவுவது அதிகரித்து வருகிறதையும், அமெரிக்காவும் சண்டையில் சேர்ந்துகொள்ளும் சந்தர்ப்பத்தையும் பார்த்து ஜெர்மன் தேசத்தார் மிகவும் பீதியடைகிறார்கள். யுத்தப் பொருள்கள் உற்பத்தி செய்ய அமெரிக்கா கைத்தொழில்கள் ஆயத்தமாய் விட்டன.

| (b). எதிர்காலம். | (b). இதுவரை நடந்தது. |
| --- | --- |
| 1. சரத் காலம்வரை பிரிடன் போராடி வந்தால், ஹிட்லருக்கு ஜயம் கிடைக்காது. | 1. ஹிட்லருக்கு ஜயம் கிடைக்கும் என்று இருந்த சூசகம் இப்பொழுது போய்விட்டது. இப்பொழுது யுத்தம் நீண்ட காலம் நடக்கும். |
| 2. பிரிடிஷ் மக்கள் முந்தியைக் காட்டிலும் இப்பொழுது ஒற்றுமையா யிருக்கிறார்கள். கடைசிவரையில் எதிர்ப்பைத் தடுக்க உறுதி கொண்டிருக்கிறார்கள். | 2. பிரிடனிலும், பிரிடிஷ் சாம்ராஜ்ஜியம் பூராவிலும் உள்ள ஜனங்கள் ஒன்று சேர்ந்து நாஸிக் கொள்கையைத் தொலைத்து, உலகத்திற்கு ஸ்வதந்திரம் அளிக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். லண்டன் எப்பொழுதும் உலகத்திற்கு பொருளாதாரத்திற்கு முக்கியமாய் இருக்கிறது; அதுபோல் ஸ்வதந்திரத்திற்காக உலகம் பூராவும் பரவியிருக்கும் யுத்தத்திலும் அது முக்கியமாக இருக்கிறது. |
| 3. பிரிடிஷ் விமானப் படையின் வீரச் செயல்கள் வெற்றியையும் கொண்டு பூரா தேசத்தினர்களுக்கும் புத்துயிர் அளிக்கின்றன. | 3. பிரிடனின் வீரச்செயல்கள் உலகத்திலுள்ள ஸ்வதந்திர தேசத்தினர்களுக்கு ஊக்கத்தை அளிக்கிறது. பிரிடிஷ் விமானப்படை அநேக போர் முனைகளுக்குச் சென்று சண்டையிட்டு வருகின்றன. அதன் வீரச்செயல்களும், சக்தி வாய்ந்த யுத்த தளவாடங்களும் உயர்ந்தவை. ஆபிரிக்காவில் நடந்த யுத்தத்தில் அதன் வீரம் பிரபலமாய் வெளியாயிற்று. |
| 4. ராஜ்ஜியம் பூராவிலும் யுத்தத்திற்கு ஆட்கள் சேர்க்கப்பட்டு வருகிறது. | 4. இன்னும் யுத்தப்படை சேகரிக்கப்பட்டுக் கொண்டுவருகிறது. 1942-ம் வருஷம் வசந்த காலத்திற்குள் பூராப்படையும் சேகரிக்கப்படும். |
| 5. கடலாதிக்கம் பூராவும், அதிலும் முக்கியமாக மத்திய தரைக் கடலாதிக்கம் பிரிடன் வசமிருந்து வருகிறது. | 5. அட்லாண்டிக் சமுத்திரம் ஒன்றில் மட்டில் பிரிடிஷ் ஆதிக்கம் எதிர்க்கப்பட்டது. ஆனால் பயன்படவில்லை. விரோதிகளின் முயற்சி பலமாக இருந்தாலும் பிரிடிஷ் கடலாதிக்கம் மேன்மையாகப் பாதுகாக்கப்படும் என்பதற்குச் சந்தேகமில்லை. |
| 6. எகிப்து வளைக்கப்பட்டு, இதாலியர்கள் ஆபிரிக்காவில் யுத்தத்திற்குத் தயார் செய்து வந்தார்கள். பிரிடிஷ் ஸோமாலிலாந்து தாத்காலியமாய் இழக்கப்பட்டது. | 6. ஆபிரிக்காவில் பிரிடன் திடீரென்று இதாலியர்களைத் தாக்கிற்று. பிரிடிஷ் சைனியங்கள் விரோதிகளுக்கு மூன்றில் ஒரு பங்கு மட்டில் தான் இருந்தாலும், எரிட்ரியா, அபிஸீனியா இவைகளைப் பிரிடன் பிடித்துக்கொண்டது. ஏற்கனவே இதாலியர் பிடித்திருந்த |

ஸோமாலிலாந்தை மறுபடியும் பிரிடிஷார் பிடித்துக்கொண்டார்கள். எகிப்தின் போர்முனையிலும் பிரிடிஷாரே முந்திக்கொண்டு தாக்கினார்கள். ஸிரியாவில் பிரிடிஷார் எடுத்துக்கொண்ட நடவடிக்கையும் இராக்கிலுள்ள உள் நாட்டு கலகத்தை அடக்கியதும், இந்தியா, மத்தியக் கிழக்கு இவைகளின் பாதுகாப்பை ஸ்தாபிக்க ஹேதுவாயிருந்தது. பிரிடிஷார் எல்லையும், அதன் நேச தேசமான துருக்கிக்கு அடுத்தாற் போலிருக்கிறது. இதாலியின் கடற்படையும் அச்சுநாடுகள் பால்டிக்கையும், கிரீடையும் ஆக்கிரமித்திருந்தாலும், பிரிடிஷ் கப்பற்படை தான் மத்தியதரைக்கடலில் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருகிறது.

(c) போது நிலைமை.

தாழ்ந்த பிரதேசத்திலும் பிரான்ஸிலும், ஜெர்மனிக்கு ஏற்பட்ட வெற்றிகளிலிருந்து பிரிடன் சமாளிக்க முடியாதோ என்று தோன்றியது. ஆனால் தேசத்தார்கள் எதிரியின் தாக்குதலைத் தடுக்க முடியுமென்றே நம்பியிருந்தார்கள். கடலாதிக்கமும், அச்சு நாடுகளின் திட்டத்தைத் தடுக்க ஆரம்பித்து விட்டது.

(c) போது நிலைமை.

ருஷ்யாவில் ஆபத்து வரலாம். இப்போது நாஸி யுத்தப்படை தொடர்ந்தாற்போல் முறியடிக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும், பெரியதாகவும் பிளவு ஏற்படாமலும் இருக்கிறது நாஸிப்படை அழியும் வரையில் ஐரோப்பாவில் அமைதி இருக்காது. ஆனால் பிரிடிஷ் கடலாதிக்கம் ஹிட்லரை ஐரோப்பாவிலேயே கைதியாக்கி விட்டது. பிரிடிஷ் விமானப்படை ஜெர்மன் பட்டிணங்களையும், தொழிற்சாலைகளையும் வெடிகுண்டு போட்டுத்தாக்குகிறது. பிரிடனுக்குச் சந்தோஷமோ, திருப்தியோ ஏற்பட இடமில்லை. ஆனால் பிரிடன் சும்மாயிருக்காது. இப்போதுள்ள முஸ்தீபுடனும், நேசதேசத்தினர் ஸ்வதந்திரத்துடன் சண்டையிடுவதைப் பார்த்தால் பிரிடன் சாதகத்தை அடையுமென்று எதிர்பார்க்கலாம். இம்மாதிரி வெற்றியை எதிர்பார்ப்பதற்கு நல்ல சூசனைகள் பல இருக்கின்றன:

# "பிரிடிஷ் விமானப் படையின் தாக்குதல் களினால் ஜெர்மானியர்களுக்கு உண்டா யிருக்கும் பயம்."

## ரயில்ப் பாதைகளிலும் சாலேகளிலும் சாமான்களே ஏற்றிச் செல்ல போக்குவரவு சாதனங்கள் குறைவு.

## கடைகளில் வெளிப் பகட்டே ஒழிய உள்ளே சாமான்கள் கிடையாது.

ஜெர்மன் எல்லேப்புறத்திலுள்ள **டைம்ஸ்** விசேஷ நிருபர் எழுதியது :—

பெர்லின், ரைன்லாந்து, ஜெர்மன் கடல் துறைமுகங்கள் இப்பட்டணங்களில் நேராகப் பார்த்த நடுநிலைமை வகிப்பவர்கள், பிரிடிஷ் ஆகாய விமானப் படையின் கடுமையான தாக்குதல்களினால் தளர்ந்த ஜெர்மானியரின் மனோ பாவத்தை விபரமாகக் கூறியிருக்கிறார்கள். இப்பொழுது புதிதானதும் அதிக சக்திவாய்ந்த வெடிகளை பிரிடிஷ் விமானங்கள் உபயோகித்து வருவதிலிருந்து அதிக ஜனச்சேதம் ஏற்பட்டாலும் அதற்கு அவர்கள் பயப்படவில்லை. வெடிகள் விழாமல் போனாலும் எச்சரிக்கை செய்யும் சங்குகளின் ஓசைகள் இராக்காலங் களில் தூங்கும்பொழுது திடீரென்று கலங்கச் செய்வதால் ஜெர்மானியர்களுக்கு அவைதான் அதிக பயத்தை விளைவிக்கின்றன. நீண்ட காலம் அரைகுறையாய் ஆடை உடுத்திருக்கும் பொதுமக்கள் குளிர் மிகுந்த, சுகம் குறைந்த அறைகளில் நீண்ட காலம் அடைந்திருப்பதும், செவிடுபடும்படியான விமான எதிர்ப்பு பீரங்கிகளின் சப்தமும், வெடி குண்டுகளின் ஓசையும், கட்டடங்கள் இடியும் சப்தமும், காயம்பட்டும் மூர்ச்சையடைந்துமுள்ள ஸ்திரீகளின் கூக்குறல்களும், இவைகளெல்லாம் சேர்ந்து உண்டாக்கும் நரம்புத் தளர்ச்சி மிகவும் பயத்தைக் கொடுக்கிறது. அதிக சக்தியுள்ள வெடிகுண்டுகள் வெடிப்பதிலிருந்து உண்டாகும் நெருக்கத்தினால் சரீரத்தில் பெருத்த காயங்கள் உண்டாகுமென்று பயம் ஏற்படுகிறது. வெடிகுண்டு வெடிப்பதினால் சுவர்களும் ஜன்னல்களும் நொறுங்கி விழுந்தும், கூரைகளைத் தூக்கி எறிந்தும் வாஸ்த்தவத்திலே ஸ்வாஸப் பையை சட்டினியாக்கி விடுகிறது. ஆகாயப் படையெடுப்பைக்கொண்டு எவ்வித முன் ஜாக்கிரதை எடுத்துக்கொண்டாலும் இவ்விபத்துக்களை ஒருவரும் தடுக்க முடியாது.

ருஷ்ய யுத்தம் ஏற்பட்டதிலிருந்து கிழக்கு முனையில் உண்டாகும் தாக்குதல்களில் ஜெர்மன் ரீச் பூராவுமுள்ள போக்குவரத்து சாதனங்கள் ரொம்பவும் பாதிக்கப்பட் டிருக்கின்றன. ரயிலில் செல்லும் பிரயாணிகள் ரொம்ப நெருக்கடியாக இருப்ப தாகவும் அநேக மணிநேரம் நடைபாதையில் நிற்க வேண்டியிருப்பதாகவும், பதியப்பட்ட சாமான்கள் சொந்தக்காரரிடமிருந்து வந்து சேர்ந்து ஒரு வாரம் இரமித்துக்கூட கொண்டுவந்து சேர்க்கப்படுகிறதில்லை யென்றும் புகார்

செய்கிறார்கள். பெட்ரோலில் சிக்கனம் செய்யவேண்டி பொதுமக்கள் ரஸ்தாக்களில் பிரயாணம் செய்வது மிகவும் குறைக்கப்பட்டுவிட்டது. அதனால் இருப்புப்பாதை மார்க்கம் செல்கிறவர்கள் அதிகமாகி, கூட்டம் அதிகரிக்கிறது.

பொதுவாக உணவுப் பொருள்களிலும் குறைவு ஏற்பட்டிருப்பதை ரயில் ஆகார வண்டியிலும் காணலாம். ஜனங்களுக்குப் பிடித்தமான சாராயங்கள் விற்கப்படுகிறதில்லை. சுருட்டுப் பிடிக்கிறவர்களுக்கு ஒரு சுருட்டு அல்லது ஐந்து சிகரட்டுகள்தான் ஒரு நாளைக்குக் கொடுக்கப்படும். எல்லாக்கடைகளிலும் மனதைக் கவரும்படியான சாமான்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் கிட்ட நெருங்கிப் பார்த்தால் இவைகள் வெரும் போலி சாமான்கள் என்று தெரியவருகிறது. இம்மாதிரி பொதுமக்களின் ஆசையை விருத்தி செய்து அதைத் திருப்தி செய்யமுடியாமல் இருப்பது நியாயமா என்ற பிரச்னைக்கு அபிப்பிராய பேதமான பதில் கொடுக்கப்படுகிறது.

**கிழக்குப் படையெடுப்பில் உண்டான பயமான சாவுகள்** ஜெர்மன் ரீச் பூராவுமுள்ள எல்லா குடும்பத்தார்களையும் துக்கத்தில் ஆழ்த்தியிருக்கின்றன. சமாசார பத்திரிகைகளில் வெளிவரும் இறந்தவர்களின் ஜாபிதா அதிக வரிசைகளில் இருந்த போதிலும் மொத்தம் இறந்தவர்களின் ஒரு பாகத்தைத்தான் அதில் கண்டிருக்கிறது. உத்தியோக முறையில் இறந்தவர்களின் ஜாபிதா பிரசுரிக்கப்படுவதில்லையென்பது பொதுமக்களின் கவலையையும் அவநம்பிக்கையையும் அதிகப்படுத்துகிறது. இறந்தவர்களின் விளம்பரம் சில குடும்பத்தார்களில் உள்ள எல்லா ஆண்மக்களும் இறந்ததைக் காட்டுகிறது. இன்னும் மற்ற குடும்பத்தார்கள் குடும்பத்தின் பெயர் விளங்கவேண்டி சற்று நேரம் சிநேகிதம் ஏற்பட்டவுடன் துரிதமாக விவாகத்தை முடித்துக்கொள்ளுகிறார்கள். நகரங்களில் ஸ்திரீகளின் எண்ணிக்கை புருஷர்களைக் காட்டிலும் அதிகம்.

எதிர்காலத்தை நோக்கி நம்மால் ஆவது ஒன்றுமில்லை என்று நைராசியம் ஏற்பட்டுவிட்டது. சரத் காலத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸ் யுத்தத்தில் பிரவேசிக்கும் என்பதை அமைதியாக எதிர்பார்க்கப்படுகிறது.

இருந்த போதிலும் முடிவில் ஜெர்மனி ஜயத்துடன் வெளிவரும் என்றும், ஜயத்துக்குப் பிறகு உள்ள காலம் இப்பொழுது படும் கஷ்டங்களைக் காட்டிலும் விசேஷ நன்மையை அளிக்குமென்றும் ஜெர்மானியர்கள் நம்புகிறார்கள்.

# அச்சுநாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம். ஆகஸ்டு 18—24, 1941.

### ஸிரியாவும் இராக்கும்—இந்த திராக்ஷை புளிக்கும்.

"ஸிரியாவில் அதிகமாக அமைதிக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. ............ ஸிரியாவிலிருப்பவர்கள் பிரிடிஷார் செய்யும் வாக்குறுதிகளை நம்பவில்லை. அவர்களின் சிநேகிதர்களான யூதர் களுக்கு அனுகூலமாக சரியான சமயம் கொடுத்ததாகவே நம்பப்படுகிறது". (பெர்ஸியன், அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 19.)

ஸிரியாவில் அபிப்பிராயங்கள் பஹிரங்கமாகச் சொல்லப்படுகின்றன. ஆனால் நாஸிகளுக்கு அவைகளைக் கேட்கப் பிடிக்காது. ஆகஸ்டு 18-ம் தேதி ஸிரியாவின் தேசீயக் கக்ஷியின் முந்தின தலைவரான ஜமீல் மார்டன்பே என்பவர் "புதிய மந்திரி சபையின் நோக்கம் பிரிடனின் பெரிய யுத்த முயற்சிக்கு உதவி, முடிவான வெற்றி யடைவதற்கான வழியில் இருக்க வேண்டும்" என்று சொன்னார். அதே மாதிரி ஷாபண்ட ரிஸ்ட் கக்ஷியைச் சார்ந்த ஸேகி பேகாடிவ் என்பவர் "தேசத்தின் ஸ்வதந்திரத்திற்காக சீர் படுத்தும் பிரிடனின் செய்கைகளை" மெச்சிப்பேசினார். "யுத்த முயற் சிக்காக உதவி புரிய பிரெஞ்சுத் தலைவர் களுடன் ஒத்துழைப்பதையும் பற்றி" சொன்னார்.

V V V V V V V V V V V V V

"ஸிரியாவின் ஜனங்களுக்கும் குடி யேறும் பிரிடிஷ் துருப்புகளுக்கும் சண்டை. சச்சரவு ஓயாமல் நடக் கிறது".
(பெர்ஸியன், அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 22.)

ஸிரியர்களுக்கும், பிரிடிஷ், இந்திய சிப்பாய்களுக்கும் விசேஷமாக நட்பு இருக்கிறது. உதாரணமாக ஹஸ்ஸட்சி என்ற இடத்திலிருக்கும் இந்தியத் துருப்புகள் இனமாக ஏராளமான மாவு, சர்க்கரை காபி, டப்பிகளில் அடைத்த ஆகாரம், இன்னும் வெகு தூரத்திலிருந்துவந்த மற்ற சாமான் களைக் கொடுக்கிறார்கள்.

"ஸிரியாவில் விலேவாசி அதிகரித்து சாமான் அகப்படாத நிலே நெருங்கி விட்டது'.
(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 23.)

ஆகஸ்டு 22-ம் தேதி 5,000 டன் நிறையுள்ள கோதுமை அனுப்பப் பட்டதென்றும் அவற்றில் 1,000 டன் ஏற்கனவேயே வந்துவிட்டதென்றும் அறிவிக்கப்பட்டது. 4,000 டன் அரிசியும் 1,000 டன் சர்க்கரையும் ஸிரியர்களுக்கு ஸப்ளே செய்யப் பட்டது. (ஆகஸ்டு 21)-ம் தேதி ஸிரியா நாணயங்கள் பாலஸ்டைன் பவுன்களுடனும் பிரிடிஷ் நாணயங் களுடனும் செலாவணி செய்யப் பட்டது.

V V V V V V V V V V V V V

"பிரிடிஷ் கொடுங்கோல் தாங்க மாட்டாமல் இராக் தேசத்தார் தங்கள் தேசத்தை விட்டுப் போகும்போது இராக்கில் இந்திய சிப்பாய்கள் ஹிம்ஸை செய்யப்படுவதாகச் சொன்ஞர்கள்".
(ஹிந்துஸ்தான் பெர்ஸியன், அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 23.)

இந்த அபாண்டமான பொய்யை இராக்கில் விரோதிக்கு ரகசியமாக உதவினவர்களே ருஜுப்படுத்துகிருர் கள். இவர்களே ஜுலே 4-ம் தேதி இராக்கிய ஆல் இராக் என்ற பத்திரிகை கேட்பதாவது: "அவர்கள் செய்தஎந்த குற்றத்தை மன்னிக்க வேண்டும்? பல வருஷங்களாகத் தயார் செய்யப்பட்ட சேனேயை யுத்தத்தில் ஈடுபடும்படி செய்த குற்றத்திற்கா? அல்லது நம்பிக்கை துரோகம் செய்து விரோதிக்கு சிநேகிதர்களேக் காட்டிக்கொடுத்த திஞல் உலகம் பழிக்குமாறு இத் தேசத்தை அவமானப் படுத்திய குற்றத்திற்கா?"

V V V V V V V V V V V V V

## உண்மை பேசினுல் கொலேதான்.

"இந்த யுத்த சமயங்களில் கூட நம்முடைய புராதன வழக்கத்தை மீறக் கூடாதென்று சொல்லுகிறேன். அதாவது உண்மையைத் தவிர்த்து எதையும் பிரசுரிக்கக் கூடாது".
(இங்கிலீஷில் ஜெர்மன் பேச்சு, ஆகஸ்டு 19.)

டாக்டர் கோயபல்ஸ் மாத்திரம் உண்மை தான் ஜெர்மனியின் கடும் விரோதி என்று தீர்மானித்து விட்டாரே. டாஸ்ரீச் என்ற பத்திரிகையில் "பி.பி.-ஸியைக் கேட்பவர்களுக்கு கொலே தண்டனேயை விதிக்கிருேம், எச்சரிக்கைக்குப் புறம்பாக மேலும் கேட்டால் உடனே அவர்கள் தலே வாங்கப்படும்" என்று எழுதியிருக் கிருர்."

### குயில் போல் கூவுகின்றனர்.

"சமாதான பிரசாரம்" என்ற பிரசித்தமான முயற்சிக்கு நாஸிகள் அடிக்கடி குயிலின் சப்தம் போடுகின்றனர். அதற்கு சில உதாரணங்கள் :—

"மற்ற நாடுகளை அடக்க ஜெர்மனி எப்பொழுதும் விரும்பவில்லை".
(ஜெர்மன் ஒலிபரப்பு, ஜுலை 23, 1940.)

"அஹிம்ஸையினாலேயே அரசியல் நோக்கங்களைக்கைப்பற்றுவதே நாஸிக் கக்ஷியின் கொள்கைகள் இருக்கின்றன".
(ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 6, 1940.)

"எவ்வளவு தடவை சமாதானத்திற்குச் சம்மதம் என்று சொல்லியிருப்பேன். நான் அதிகாரத்திற்கு வந்தவுடன் சைனியத்தை மறுபடி புதிப்பிக்க விரும்பவில்லை".
(பெர்லின் யுத்த தளவாட தொழிலாளர்களுக்கு ஹிட்லரின் பேச்சு— ஒலிபரப்பு, டிஸம்பர் 10, 1940.)

### புலிபோல் உருமுகின்றனர்.

ரத்த வெறிபிடித்து போடும் சப்தங்களுக்கு சில உதாரணங்கள்.

குழந்தைகளைக் காணாமல் தாய்கள் தேடுவார்கள். புருஷர்களுடைய கொள்ளி தேகங்களைத்தேடி மனைவிகள் செல்வார்கள். ஸ்திரீகள் வீட்டிற்காகவும் ஜனங்கள் ஆகாரத்திற்காகவும் கதறுவார்கள்.
(ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 13, 1940.)

"ஜெர்மன் மூழ்கி விமானங்களின் யந்திர சப்தத்தைக்கேட்டு பயந்து பிரிடனிலுள்ளோரின் மனோநிலையும் தைரியமும் தளர்ந்து வருகிறது".
(ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 23, 1940.)

"ஜெர்மனியின் எண்ணம் அதன் விரோதிகளை ஒழிப்பதுதான் என்றவரையில் போஸ்டன் ரேடியோ கூறுவது உண்மை".
(ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 13, 1940).

இவ்விதமாகவெல்லாம் குயில்போல் சமாதானப் பேச்சுகள் பேசுவதும் நாஸி முறையில் வீண் வாக்குத்தத்தங்களும் பயமுறுத்தல்களும் நாஸிகளின் துரும்புத்தனமானவைதான். ஆகையால் சர்ச்சில் சொல்லுவதுபோல் ஹிட்லர் ஒரு "உயிரை அழிக்கும் துவேஷ எண்ணமே உருவெடுத்தவனாக" இருக்கிறான்.

## ஜயபேரிகை.

### நாஸி எண்ணங்கள் முறிக்கப்பட்டன.

"எவ்வளவு தூரம் யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறோ"மென்று ஜனவரி மாதத்தில் மிஸ்டர் சர்ச்சில் சொன்னார். அதிலிருந்து இன்னும் அதிக தூரம், கடுமையான வழிகளைக் கடந்து வெற்றிகளுக்குச் சமீபித்து வந்திருக்கிறோம்.

இப்பாதையில் நாட்டப்பட்ட மைல் கல்கள் நாஸி எண்ணங்களுக்கும், தற்புகழ்ச்சிகளுக்கும் செய்த பாஷாண ஸ்தாபனம் ஆகும். 1940-ம் வருஷம் மே 17-ம் தேதி ப்ரெமன் ரேடியோ பிளமிஷ் பாஷையில் சில மாதங்களில் பிரிடனுக்கு வெற்றி கிடைக்குமென்று ஜோஸியம் சொன்னார். ஆனால் இது இன்னும் கிடைக்கவில்லை.

1940-ம் வருஷம் ஜுலை 23-ம் தேதி பிரிடன் பி. பி. ஸி. போலச் சொன்ன பொய் நாஸி ஸ்டேஷன் செய்தியில் ஹிட்லர் ஸெப்டம்பர் மாதத்திற்குள் பிரிடன் சண்டையை முடிப்பதாகச் சொன்னது. அதுவும் சம்பவிக்க வில்லை.

1940-ம் வருஷம் ஆகஸ்டு 15-ம் தேதி தான் பிரிடன் தோற்கப்படும் என்று காலுண்டுபரக் ரேடியோ நாஸிக் கட்டுப்பாட்டிலிருந்துகொண்டு சொல்லிற்று. அதுவும் நேரவில்லை.

1940-ம் வருஷம் ஆகஸ்டு 14-ம் தேதி ஸ்வீடிஷ் பாஷையில் கோனிக்ஸ்பர்க் ரேடியோ லண்டன், ஸெப்டம்பர் 17-ம் தேதி பிடிபடுமென்றது. அதுவும் நேரவில்லை.

ரோம் ரேடியோ இங்கிலீஷில் 1940-ம் வருஷம் ஸெப்டம்பர் 9-ம் தேதி "இன்னும் சிலவாரங்களில் இந்த சண்டை முடியும்" என்றது. அதுவும் நடக்கவில்லை.

பெர்லினிலுள்ள ஸ்காண்டிநேவியன் நிருபருக்கு கோயபல்ஸ் 1940-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் "இன்னும் 6 மாதம் கிரமித்து நான் உன்னைப் பார்க்கும் போது யுத்தம் முடியுமென்று சொன்ன ஜோஸியம் பலித்ததை அறிவாய்." என்றது. அதுவும் பலிக்கவில்லை.

பெர்லினிலுள்ள ஸ்பெயின் நிருபருக்கு 1941-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் கோயபல்ஸ் சொன்னது "இன்னும் ஒரு வருஷம் முடிவதற்குள் இந்த யுத்தத்தை ஜெர்மனி ஜயித்துவிடும்" இது நேரவுமில்லை, இனியும் நேராது.

அடியில் குறிப்பிட்டிருக்கும் சில சம்பவங்களிலிருந்து நாஸிகளின் பேச்சுக்களில் இன்னும் சில பொய்கள் வெளியாகின்றன.—

## பிரிடன்பேரில் படையெடுப்பு.

"எல்லாவற்றையும் ஜெர்மன் பீரங்கிகள் பொடியாக்கிவிடும். லண்டனெல்லாம் இடிந்துபோன கட்டடங்கள்தான் பாக்கியிருக்கும். நாஸிகள் வரவை எதிர்பார்த்திருக்கும் பரிதாபகரமான இங்கிலீஷ்காரர்கள், அவர்கள் வருவதற்குமுன் இறந்துவிடுவார்கள். பாழாகாமல் பாக்கியுள்ள லண்டன் தெருக்களில் எப்பொழுதும் மனுஷ சஞ்சாரமில்லாமலிருக்கும்.,,

(ஆங்கிலத்தில் ஜெர்மன்பேச்சு, ஜுலை 17, 1940).

"பிரிடிஷ் ராணுவ உத்தியோகஸ்தர்கள் ஜெர்மன் படையெடுப்பை தங்களால் தடுக்க முடியாதென்று உணர்ந்திருக்கிறார்கள்."

(அராபிக் பாஷையில் வெளிவந்த ஜெர்மன் சமாசாரம், ஆகஸ்டு 7, 1940).

## லுப்ட்வாபியும், பிரிடிஷ் விமானப்படையும்.

"லண்டனாவது வேறு எந்த பெரிய இங்கிலாந்திலுள்ள நகரமாவது தன்னைத் தற்காப்புச் செய்துகொள்ள முயற்சித்தால் சில மணிகளிலோ அல்லது நிமிஷங்களிலோ அவை அழிக்கப்படும்."

(போர்சுகலுக்கு ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூலை 1940).

"சென்ற மூன்று நாட்களாக நடந்த விமானத்தாக்குதல்களில் பிரிடிஷ் துறைமுகங்களும், விமான நிலயங்களும் அழிக்கப்பட்டன. இப்பொழுது பிரிடனிலிருந்து தாக்குவதற்கு விமானங்கள், கப்பல்கள் புறப்பட அங்கு ஒரு தளங்கூட கிடையாது."

(ஆங்கிலத்தில் ஜெர்மன் சமாசாரம், ஆகஸ்டு, 15,1940).

"ஒரு எதிரி விமானங்கூட ஜெர்மனிக்கு வர முடியாதென்று சிறுகுழந்தைகளுக்குக்கூட ஜெர்மனியில் தெரியும்."

(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் சமாசாரம், ஸெப்டம்பர் 22, 1940).

## பொருளாதார முற்றுகையும், பட்டினிபோடுவதும்.

"பிரிடனிலுள்ள உணவுப்பொருள்கள் இரண்டு வாரங்களுக்குமேல் தாங்காது."

(ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூலை 19, 1940).

"பிரிடனைச்சுற்றி முற்றிலும் பொருளாதார முற்றுகை போடப்பட்டது. அதற்கு இரண்டு வழிகள்தான் உண்டு; ஒன்று பட்டினியால் அழியவேண்டும், அல்லது சரண்புக வேண்டும்."

(அராபிக் பாஷையில் ஜெர்மன் சமாசாரம், ஆகஸ்டு 6, 1940).

"இனி ஒரே ஒரு முற்றுகைதான் உண்டு; அதாவது ஜெர்மனி பிரிடனைப் பொருளாதார முற்றுகை போடுவதுதான்."

(ஆங்கிலத்தில் ஜெர்மன் பேச்சு, ஆகஸ்டு 22, 1940).

## கடலாதிக்கம்.

"பிரிடனுக்கு கப்பலில் வந்திறங்கும் சாமான்களை மூழ்கடிப்பதும், அழிப்பதும் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் முடியும்."

(ஆங்கிலத்தில் ஜெர்மன்பேச்சு, ஆகஸ்டு 7, 1940).

"பிரிடிஷ் கப்பற்படை, இனிமேல் உபயோகப்படுத்தாமல் இருப்பதுதான் நல்லது என்று சொல்லக்கூடிய விதமாக அவ்வளவு பெரிய சேதத்தையடைந்து விட்டது."

(ஆங்கிலத்தில் இதாலிய சமாசாரம், ஆகஸ்டு 15, 1940)

## யுத்தத்திற்கு வேண்டியநிதி.

"பிரிடிஷாரின் பொருளாதாரம் ரொம்பவும் நாசமாகிவிட்டது."

(ஜெர்மன் ஒலிபரப்பு, ஆகஸ்டு 10, 1940).

"கிரேட் பிரிடனுக்கு பண வருமானங்கள் கிடையாது."

(ஆங்கிலத்தில் ஜெர்மன்பேச்சு, டிஸம்பர் 5, 1940).

## ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்கள்.

"தன் தேசத்தைவிட்டு டிகாலி கக்ஷியைச் சேர்ந்து, அந்நிய நாட்டில் இருந்து கொண்டு ஜெர்மனிக்கு விரோதமாக சண்டையிடும் பிரெஞ்சுக்காரர்களின் எண்ணிக்கை நாலைந்துபேர்கள்தான்."

(ஆங்கிலத்தில் ஜெர்மன் சமாசாரம் ஆகஸ்டு 6, 1940).

## அமெரிக்காவின் உதவி.

"பிரிடிஷ் ராஜாங்கம் அமெரிக்காவிலிருந்து பொருள்கள் வாங்குவதென்று ஏற்பாடு செய்துகொண்டால் அவைகள் பிரிடனில் வந்துசேராதபடி ஜெர்மன் படைகள் தடுத்துவிடும் என்பது நிச்சயம்."

(ஆங்கிலத்தில் ஜெர்மன்பேச்சு, டிஸம்பர் 5, 1940)

"அமெரிக்காவில் செய்யப்படும் விமானங்கள் ஜெர்மனியிலும் பிரிடனிலும் உள்ள விமானங்களைக் காட்டிலும் மட்டமானவை. பிரிடன் ராணுவ பாது காப்புக்கு அவைகள் போதாது."

(ஆங்கிலத்தில் ஜெர்மன்பேச்சு, டிஸம்பர் 5, 1940).

## ஆபிரிக்காவில் அச்சு நாடுகள்.

"சமீபத்தில் இங்கிலாந்து தாக்கப்படும். பிறகு ஸெப்டம்பரில் யுத்தம் ஆபிரிக்காவில் பரவும். எல்லாம் போட்டதிட்டப்படி நடந்தால் இந்த வருஷம் முடிவதற்குள் இரண்டு கண்டங்கள் அதாவது ஐரோப்பாவும், ஆபிரிக்காவும் ஜெர்மன் ரீச்சுடனும் இதாலிய சாம்ராஜ்ஜியத்துடனும் சேர்க்கப்பட்டுவிடும்."

(டென்மார்க்குக்கு ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூலை 1940).

---

# கதம்பம்.

1. "செஞ்சேனை நாஸி யந்திரப்படையை, ரொம்பவும் கெடுதி செய்திருக்கிறது. அநேகமாய் உயிர் நிலையைத் தாக்கிவிட்டது."

(மார்டின் அக்ரான்ஸ்கி அங்காராவிலிருந்து ஒலிபரப்பியது, ஆகஸ்டு 9.)

2. "பெர்லின் கொடுத்த பொய் கணக்கிலேயே ஒழிய வாஸ்தவத்தில் செஞ்சேனை அழியவில்லை."

(நியூ யார்க் பத்திரிகை, ஆகஸ்டு 11.)

3. "பிரயாசை, கையிருப்பு, சாமர்த்தியம், இதைவிட பூகண்டத்தில் முக்கால் பங்கு ஜனங்களின் அனுதாபம் இவைகளெல்லாம் உங்களுக்கு விரோதமாகயிருக்கிறது."

(டொராதி தாம்ஸன் அமெரிக்காவிலிருந்து ஜெர்மன் பாஷையில் ஜெர்மானியர்களுக்கு ஒலிபரப்பியது.)

4. "விமான பலத்தைக்கொண்டுதான் இறுதியில் ஜயமடையவேண்டும்."
(மிஸ்ட்டர் பவர், கனடா ஆகாய மந்திரி—மான்ட்ரீலிலிருந்து, ஆகஸ்டு 20.)

5. "பிரிடிஷ் நடத்திவரும் போர் ரொம்பக் கஷ்டமாகவும் நீண்டகாலம் பிடிக்கலாம். ஆனால் இறுதியில் வெற்றிகிடைப்பது நிச்சயம்".
(மிஸ்ட்டர் சர்ச்சில், ஆகஸ்டு 24.)

6. "இப்பொழுது பிரிடன் உள்நாட்டிலும் வெளியூர்களிலும் செய்யும் பெரிய யுத்தத்தினால் இந்தியா சாதகமடையவில்லை என்று சொல்லுவது உண்மையுமல்ல, நன்றியில்லாத பேச்சாகவும் ஆகும்".
(மிஸ்ட்டர் என். ஆர். ஸர்க்கார் கல்கத்தாவில் சந்தித்தபோது கூறியது. கல்கத்தா, ஆகஸ்டு 25.)

7. "பெர்லினுக்குமேல் ஆகாயத்தில் நாம் இருவரும் சந்திப்போம்".
(ஸர் சார்லஸ் போர்டல், பிரிடிஷ் விமான உத்தியோகஸ்தர்களின் தலைவர். ஸோவியத் ஆகாய விமானிகளின் வந்தனத்துக்கு பதிலளித்தது, ஆகஸ்டு 22.)

8. "நமக்குச் சண்டையை ஜயிக்க வேண்டுமென்ற திட்டத்தைத் தவிர வேறுதிட்டம் வேண்டியதில்லை".
(ஹிஸ் ஹைனஸ் பாட்டியாலா மஹாராஜா, ஸிம்லாவில் சீக்கியர் விருந்தில் சொல்லியது, ஆகஸ்டு 20, 1940.)

9. "இந்த யுத்தமானது தீமைகளை ஒழிப்பதற்கு மாத்திரம் பெருத்த போராட்டமாயில்லை. முடிவில் அதிலிருந்து நிச்சயமாக சில நன்மைகளும் பிறக்கவேண்டும்".
(ஆஸ்திரேலியா பிரதம மந்திரியான மிஸ்ட்டர் மென்ஸீஸ் கான்பெர்ராவில் சொல்லியது, ஆகஸ்டு 19.)

10. "என்ன ஆனபோதிலும் நியூஸிலாந்து பிரிடனுடன் சமத்துவமாக நின்று முடிவுவரை யுத்தம் புரியும். அந்த முடிவு வெற்றிதான்".
(நியூஸிலாந்து பிரதம மந்திரி, ரைட் ஆனரபிள் பீடர் பிரேசர் லண்டனிலிருந்து ஒலிபரப்பியது, ஆகஸ்டு 15.)

11. "எல்லா தேசத்தினர்களைக் காட்டிலும் இந்த யுத்தத்தில் இங்கிலீஷ்காரர்கள் பெரும் பாரத்தை வகித்தார்கள். சிரம காலங்களிலும் கூட பிரிடன் வணங்கவில்லை. தோல்விகள், பெரியவிபத்துகள் நேர்ந்தாலும், அவைகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல், தைரியத்தைக் கைவிடாமல் அது போராடி இருக்கிறது. அதன் மனோபலமு[illegible] பலமும் இந்த யுத்தத்தில் காட்டினது போல, இங்கிலாந்தின் தேசசா[illegible]தில் எப்பொழுதும் கிடையாது. இப்பொழுது அடிமையாக்கப்பட்டிருக்கும் ஜனங்கள் சந்தோஷத்துடன் ஐரோப்பாவில் புதிய திட்டம் ஏற்படுத்துவார்கள். ஐரோப்பாவிலுள்ள ஜனங்களுக்கு ஸ்வதந்திரம் ஏற்படவேண்டுமானால், இங்கிலாந்துதான் தலைமைவகிக்க வேண்டும்".
(மேற்கு ஸ்வீடனின் பிரதான பத்திரிகையில் எழுதியது, ஜூலை 26, 941).

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் 60—(3-வது பிரிவு).

1941—

| | | | | மணி |
|---|---|---|---|---|
| செப்டம்பர் ...6, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலே | 6.30 |
| 7, | ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | ராசியமங்கலம் ... | ,, | 6.30 |
| 8, | திங்கட்கிழமை ... | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலே | 10.15 |
| | | திருவப்பூர் ... | மாலே | 5.30 |
| | | குழிபிரை ... | ,, | 6.00 |
| | | செவலூர் ... | ,, | 6.30 |
| 9, | செவ்வாய்க்கிழமை. | கோட்டைக்காடு ... | ,, | 6.00 |
| | | கரம்பக்குடி ... | ,, | 6.30 |
| 10, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலே | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலே ... | ,, | 10.15 |
| | | ராமச்சந்திரபுரம் ... | மாலே | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |
| 11, | வியாழக்கிழமை ... | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | கீழக்குரிச்சி ... | ,, | 6.30 |
| 12, | வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 61—(4-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 13, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலே | 6.30 |
| 14, | ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | ,, | 5.30 |
| | | நீர்ப்பழனி ... | ,, | 6.00 |
| | | ஆலூர் ... | ,, | 6.30 |
| 15, | திங்கட்கிழமை ... | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | | கிள்ளனூர் ... | ,, | 6.30 |
| 16, | செவ்வாய்க்கிழமை | காரையூர் ... | ,, | 6.00 |
| | | இடையாத்தூர் ... | ,, | 6.30 |
| 17, | புதன்கிழமை | ம்மட்டிவிடுதி ... | ,, | 6.00 |
| | | மயூர் ... | ,, | 6.30 |
| 18, | வியாழக்கிழமை. | நார்த்தாமலே ... | ,, | 6.00 |
| | | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |
| 19, | வெள்ளிக்கிழமை... | (பொன்னமராவதி) புதுப்பட்டி | மாலே | 6.00 |
| | | வேந்தம்பட்டி ... | ,, | 6.30 |

69402

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—6-9-41.